# ஆஸாத்

தமிழ் தேசீய வாரப் பத்திரிகை, கும்பகோணம்.

வருட சந்தா 6—0—0] ஆசிரியர்கள்:- ஹகீம் சகோதரர்கள். [தனிப்பிரதி 0—2—0

மலர் 1. { சர்வஜித்துஹூ மாசிமீ 25வ 8—3—1948 ஹிஜிரி 1367 ரபியுலாகிர்மீ 26வ திங்கட்கிழமை. } இதழ் 7


# கல்வி இன்றி சுதந்திரம் பயனளிக்காது

## சகோதரத்துவம், அமைதி, அன்பே இஸ்லாமிய போதனை

## மஹாத்மா மனவேதனைக்குக் காரணம்

—( மௌலானா அபுல் கலாம் ஆஸாத் )—

புதுடெல்லி, 27—2—48

இந்திரப்பிரஸ்த காலேஜ் தினக்கொண்டாட்டத்தில், இந்திய சர்க்கார் கல்வி மந்திரி, மௌலானா அபுல்கலாம் ஆஸாத், பேசுகையில், "மகாத்மா காந்தியின் கொள்கைகளை அனுசரித்து, நம்முடைய வாழ்க்கையைத் திருத்தி அமைத்துக்கொள்ள முயற்சி செய்வதன்மூலம், இன்று இந்தியாவையும், உலகத்தையும் எதிர்நோக்கியுள்ள பல பிரச்னைகளை, நம்மால் தீர்க்கமுடியும்." என்று கூறினர்.

மேலும் அவர், "பெண்கள் கல்வி விஷயத்தில் அதிகமாக சொல்லவேண்டிய அவசியமில்லை. வீட்டு நிர்வாகத்தை சரியான முறையில் நடத்துவதற்காக மட்டுமின்றி, ஆண்களுடன் தோளோடு தோள் நின்று, சமுதாய வாழ்க்கையை முன்னேற்ற உழைப்பதில் பங்கெடுத்துக்கொள்ளக்கூடிய அளவுக்கு, பெண்களுக்கும் கல்விபோதிக்கப்படவேண்டியது அவசியம்" என்று வற்புறுத்தினர்.

"சமுதாயத் துறையிலும், தேச சேவையிலும் பெண்களுக்கு பயிற்சி அளிக்கப்படவேண்டியது அவசியம். இவ்வித லட்சியத்தை அடிப்படையாகக் கொண்டு பார்க்நம்போது, இதுவரை, இத்துறையில் நாம் ஒன்றுமே செய்யவில்லை என்பது உணரமுடியும்.

எழுதப்படிக்கத் தெரிந்த இந்தியர்கள் சம்மந்தப்பட்டவரை மௌலானா ஆஸாத் குறிப்பிடுகையில், "இந்திய பாஷைகளில் ஏதாவது ஒரு பாஷையின் "அ, ஆ" தெரிந்தவர்கள், நம் நாட்டில் 100-க்கு 13 பேரே இருக்கின்றனர். கல்வித் துறையில் நாம் எந்த அளவு பிற்போக்கான நிலைமையில் இருக்கின்றோம் என்று இதனல் உணரலாம்.

இன்று நம் நாடு சுதந்திரம் அடைந்துவிட்டது. நம்மவர்களுக்கு கல்வி போதிக்கப்படாதவரையில், சுதந்திரம் பிரயோஜனமளிக்க முடியாது. நாட்டின் நிர்மாணத்தில் முழுக்கவனமும் ஈடுபடுத்தியிருக்க வேண்டிய இச்சமயத்தில், நம் கவனம் அழிவுத் துறையில் சென்றுகொண்டிருப்பது துரதிர்ஷ்டமேயாகும்.

ஆகஸ்ட் 15-ல் நாம் கொண்டிருந்த நோக்கங்கள் என்ன? கடந்த 25 வருஷங்களாக நாட்டின் நிர்மாணக்கனவு கண்டு கொண்டிருந்தோம். ஆகஸ்ட் 15-க்குப் பிறகு நம் கனவை நனவாக்குவதற்கான திட்டங்கள் வகுப்பதே நம் கடமையாக இருந்தது. ஆனல், நிர்மாண வேலைகளை மறந்து, அவரவர்கள் தங்களைமட்டும் பலப்படுத்திக்கொள்ள சண்டையில் இறங்கவேண்டிய அளவுக்கு சூழ்நிலை மாறுதல் அடைந்தது. நாடு ஒழுக்கமின்மை என்னும் புயலில் அகப்பட்டு, பல்லாயிரக்கணக்கான நம் மக்கள் உயிரிழந்தனர். அந்த துக்ககரமான நாட்கள் கழிந்தும் விட்டன. இன்று நம்முடைய சில திட்டங்களை அமுலுக்குக் கொண்டுவர வேலை செய்யமுடியும்.

மகாத்மா காந்திஜியின் கொலை, நம் நாட்டின் பல லக்ஷம் சகோதரர்களை சிந்திக்கும்படி செய்துவிட்டது. இந்தியாவை இன்றைய நிலைமைக்கு உயர்த்திய ஒரு தலைவரை, ஒரு இந்தியனே தாக்குவதற்குக் காரணமென்ன? அவ்விதம் ஏன் நடந்தது?, என்று நாம் நிதான புத்தியுடன் சிந்திக்கவேண்டும். இது சாதாரண விஷயமல்ல. மிகவும் வருந்தத்தக்க ஒரு சம்பவம், என்று சொல்லிவிடுவது மட்டும் போதாது.

இக்கேள்விக்குப் பதிலளிப்பதற்கு, நாம் நம்முடைய உள்ளங்களையே துளாவ வேண்டியிருக்கிறது. இந்த சம்பவம் நடந்ததற்குள்ள காரணங்களை நாம் நிவர்த்திக்கவேண்டும். நம்முடைய பிரகாசமான நெற்றியில் ஏற்பட்டுவிட்ட களங்கத்தை அகற்றியாக வேண்டும். மகாத்மா காந்திஜியின் கொலைபோன்ற சம்பவங்களும் இந்த நாட்டில் நடக்கமுடியுமென்றால், வேறு எந்த காரியங்கள் நடக்காமல் இருக்கமுடியும்?

## பெரிய பொறுப்புக்கள்

ஏதாவது ஒரு விதத்தில், கல்வியுடன் தொடர்பு கொண்டிருப்பவர்களுக்கு பெரும் பொறுப்புக்கள் ஏற்பட்டிருக்கின்றன. பரஸ்பர துவேஷத்தின் காரணங்களை, நாட்டிலிருந்து அகற்றுவது நம் கடமை. மகாத்மா காந்தி உருவாக்க விரும்பிய அம்மாதிரி சூழ்நிலையை நாம் ஏற்படுத்தியாகவேண்டும். பிரச்னைகளை அணுகும் மகாத்மாஜியின் ஹிந்து மனோபாவத்திற்கும், புதிய தேசியவாதிகளின் மனோபாவத்திற்குமிடைய்ய ஆகாயத்திற்கும், பூமிக்கும் உள்ள வித்தியாசம் இருந்தது.

இஸ்லாமும் பலதரப்பட்டவர்களுக்கு பலதரப்பட்ட தோற்றங்கள் அளிக்கின்றது. தங்களுடைய கொள்கைகளை ஏற்றுக்கொள்ளாதவர்கள் காபிர்கள் என்றும், நியாயமாக நடத்தப்படுவதற்கு உரிமையுள்ளவர்கள்தான் என்றும் சிலர் நம்புகின்றனர். இன்னொரு புறம் முஸ்லிம்களில் பலர் இஸ்லாம் சகோதரத்துவம், அமைதி, அன்பு, முதலிய உயரிய லட்சியங்களை போதிக்கும் ஒரு மதம் என்று நம்புகின்றனர்.

இதே விதமாக மகாத்மாஜியின் ஹிந்து மனப்பான்மை உபநிஷத்துக்களையும், பிரம்ம சூத்திரத்தையும் அடிப் படையாகக்கொண்டிருந்தது. வகுப்பு வேற்றுமைக்கும், குறுகிய மனப்பான்மைக்கும் அங்கு இடம் இருக்கவில்லை. எல்லோருடைய எண்ணங்கள், நோக்கங்களுக்கும் இடமளிக்கக்கூடிய ஒரு உன்னத ஸ்தானத்திற்கு மகாத்மாஜி ஹிந்து தர்மத்தை உயர்த்திவிட்டார். அவர் சர்வதேசிய சத்திய அம்சத்தில் நம்பிக்கைகொண்டிருந்தார்.

சமீப கலவரங்களால் சில மனிதர்களுக்கு தொந்தரவு ஏற்படுவதைக்குறித்து மட்டும் மகாத்மாஜி மனவேதனை அடையவில்லை இன்றைய மனக்கசப்பின் முடிவான பலாபலன்களைக் குறித்து அவர் பயந்தார். அவ்வித நோக்கங்களை நாமும் மேற்கொள்ளவேண்டும். மகாத்மாஜியின் கொள்கைகளை அனுசரித்து நம்முடைய வாழ்க்கைகளை நாமும் திருத்தி அமைக்க முயற்சிப்பதன் மூலம் இன்று இந்தியாவையும், உலகத்தையும் எதிர்நோக்கியுள்ள பல பிரச்னைகளை நம்மால் தீர்க்கமுடியும். அம்மாதிரி அடிப்படையில் சமுதாய நோக்கங்களை திருத்தியமைக்க முழுமுயற்சி செய்யவேண்டிய கடமை கல்வி ஸ்தாபனங்கள், கல்வி போதகர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது.

முடிவாக இந்திரபிரஸ்த காலேஜுக்கு பெண் கல்வி முன்னேற்றத்திற்காக சர்க்கார் உதவி அளிக்கும்'' என உறுதியளித்தார்.

# சோஷியலிஸ்டு முற்போக்குத் திட்டம்

## புது முறைக் கல்வி, கட்டாய ராணுவப் பயிற்சி அவசியம்.

புதுடெல்லி, 25—2—48.

மஹாத்மா மறைவால் ஏற்பட்டிருக்கும் நிலைமையை சோஷியலிஸ்ட் தேசீய நிர்வாகக் கமிட்டி இரண்டு நாள் கூடி விவாவித்து, 10 யோஜனைகள் அடங்கிய அறிக்கை ஒன்று வெளியிட்டிருக்கிறது.

பத்திரிகை நிருபர்களிடையே திட்டங்களை விளக்குகையில், "அரவிந்தர், ரமண மகரிஷி, டாக்டர் பகவான்தாஸ் போன்ற ஆத்மீக தலைவர்களும், நாட்டுக்கு வழிகாட்ட, வெளிவந்து வேலை செய்ய வேண்டியது அவசியம். நான், இத்திட்டங்களைக் குறித்து காங்கிரஸ் தலைவர் டாக்டர் ராஜேந்திர பிரஸாதுடன் விவாதித்தேன். "தன் வகுப்பைச் சேர்ந்த ஒருவனாலேயே ஒரு தலைவர் கொல்லப்பட்டது இதுதான் முதல் சம்பவமாகும். இது ஹிந்து சமுகத்துக்கே ஒரு பெரிய களங்கம்,'' என்று அவர் கூறினர். மார்ச் மாதத்தில் நிர்வாகக் கமிட்டிக் கூட்டம் பம்பாயில் நடக்கும். அதையடுத்து மிஸ்டர் அசோக் மேத்தா தலைமையின் கீழ் சோஷியலிஸ்ட் கட்சி கன்வென்ஷன் நாஸிக்கில் நடக்கும். எதிர்கால வேலைத்திட்டத்தைக்

குறித்து முடிவாக அதில் தீர்மானிக்கப்படும்,'' என்று ஜெயப்பிரகாஷ் அறிவித்தார்.

"மகாத்மா காந்தியின் மறைவால் தேசத்தில் பல சிக்கலான பிரச்னைகள் தலைதூக்கியிருக்கின்றன. நாட்டின் அமைதிகுலைவது மட்டுமின்றி, சமுதாயமே சீர் குலைந்துவிடுமென்றும் அஞ்ச வேண்டியிருக்கிறது. மஹாத்மாஜீயின் மரணம் ஒவ்வொரு இந்தியனும் வெட்கித் தலை குனிய வேண்டிய ஒரு சம்பவமாகும்."

"மஹாத்மாஜியைக் கொன்றவன் ஒரு ஹிந்து. ஹிந்துக்கள் செய்த சதியின் காரணமாகவே, அவன் அக்காரியத்தைச் செய்தான் என்று நாம் இன்னும் வெட்கப்படவேண்டியிருக்கிறது. கடந்த சில மாதங்களாக, இந்தியாவில் நடந்ததும், குழந்தைகள், பெண்கள்மீது நடந்த அக்ரமங்களும், பரிதபிக்கத்தக்கவையாகும். அத்துடன் நில்லாமல், முடிவில் இந்தியாவின் மிகப் பெரிய மனிதரும் உயிரிழந்தார். இம் மாபெரும் பயங்கர சம்பவத்திற்குப் பிறகு, உடனடியாக சமுதாயமே அதற்கு ஈடு செய்வதில் முனைய வேண்டும்"

"ஆத்மீக, கலாசாரத்துறையில் நாட்டை முன்னேற்ற வேண்டியது அவசியம். தனிப்பட்ட ஒரு மனிதனால் அது சாத்தியமில்லை. சமுதாயத்தின் ஐக்கிய சக்தியே அதைச் செய்யமுடியும் நெருக்கடியான இச்சமயத்தில், நாட்டிற்கு அளவு கடந்த நஷ்ட்த்தை உண்டாக்கியிருக்கும் வகுப்பு வேற்றுமையை வேருடன் களைந்து எரிய, எல்லோரும் ஒற்றுமையாக ஒத்துழைக்குப்படி, சர்க்காரையும், பொதுமக்களையும் சோஷியலிஸ்ட் கட்சி வேண்டிக்கொள்கிறது. இத்துறையில் சோஷியலிஸ்டு கட்சியுடன் பொது மக்கள் ஒத்துழைப்பரென்று நாம் நம்புகிறோம்.''

சோஷியலிஸ்டு கட்சி சர்க்காருக்கும், பொது மக்களுக்கும் சமர்ப்பித்திருக்கும் 10 யோஜனைகள் கீழ்வருமாறு:—

1. ஒரு குறிப்பிட்ட ஜாதி, அல்லது மதத்தினரை மாத்திரம் அங்கத்தினர்களாகக்கொண்ட ஸ்தாபனங்கள் அரசியல் நடவடிக்கைகளிலும், குறிப்பாக சட்டசபை, ஸ்தலஸ்தாபன தேர்தல்களிலும், கலந்து கொள்ளாமல் தடுக்க, சட்டமியற்ற வேண்டும்; அல்லது, இப்பொழுதுள்ள சட்டத்தைத் திருத்தி அமைக்கவேண்டும்.

2. இந்திய அரசியலில் மத வகுப்புவாத ஸ்தாபனங்களுக்கு இடமளிப்பதோ, மதம், அல்லது ஜாதியினருக்கு ஸ்தானங்கள் ஒதுக்குவதோ, சலுகை காட்டுவதோ கூடாது.

3. சர்க்கார் உத்தியோகங்களில் வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தையும், விண்ணப்பங்களில், விண்ணப்பதாரரின் ஜாதி, மதத்தைக் குறிக்கும் வழக்கத்தையும் நீக்கவேண்டும்.

4. மத்திய, மாகாண சர்க்கார்களுக்கும், மக்களுக்கும் சொந்தமான, ரேடியோ, பிரஸ் முதலிய இதர பிரசார சாதனங்கள், நாட்டில் வகுப்புஒற்றுமை நிலைநிறுத்த, பொதுமக்கள் அடங்கிய கமிட்டிகள் வசம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

5. சமுதாய நிர்மாணத்திற்கு கல்வியே அடிப்படை. ஆகையால் போதனு முறையை சர்க்கார் அறவே மாற்றியமைக்கவேண்டும். மத அடிப்படையில் இருக்கும் எல்லா பள்ளிக்கூடங்களும், மூடுவதுடன் ஸ்கூல்களிலும் காலேஜ்களிலும்மதப்பாடங்களை தடை செய்யவேண்டும். பாட புத்தகங்கள் புதிய முறையில் எழுதப்படவேண்டும். குறிப்பாக வகுப்பு வேற்றுமையைதூண்டிவிடக்கூடிய பகுதிகள் சரித்திரத்திலிருந்து நீக்கப்படவேண்டும்.

6. ராணுவத்திற்கு ஆள் எடுப்பதில் ஜாதி, மத மாகாண வித்தியாசங்கள் பாராட்டாமல், பல் வேறு வகுப்பினருக்கு ராணுவத்திலிருக்கும் தனித் தனி போஜன விடுதிகள் மூடப்படவேண்டும்.

7. சர்க்கார் உத்தியோகஸ்தர்களை புதிய முறையில் பயிற்சி அளித்து, எல்லா சர்க்கார் ஊழியர்களுக்கும் ஹிந்துஸ்தானி தெரிய வேண்டியது அவசியமாக்கப்படவேண்டும்.

8. சேவா படைக் குழுவை மீண்டும் புதிய அடிப்படையில் ஆரம்பித்து, சர்க்கார் தொடர்பில்லாமல், பொதுமக்களிடையே தேகப்பயிற்சி ஆசையை வளர்க்கவேண்டும்.

9. 18-லிருந்து 19-வயதுள்ள ஒவ்வொரு வாலிபனும் கட்டாயமாய் பதிவு செய்துகொண்டு, அவசியம் ஏற்படும்போது, பயனளிக்கத்தக்க பிரஜையாக விளங்கும்படிச்செய்ய, அவர்களுக்கு அரசியல், ராணுவப் பயிற்சி அளிப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

10. ஐக்கிய சமுதாயத்தில் நம்பிக்கை கொண்டுள்ள சகல அரசியல், சீர்திருத்த ஸ்தாபனங்களும், வெளிவந்து வாலிபர்களுக்கும், குழந்தைகளுக்கும் வழிகாட்ட வேண்டும். வாலிபர்களின் அணிவகுப்புக்கள், அவ்வப்போது நடத்தி, தேசம் சம்மந்தப்பட்ட வரை அவர்களுடைய கடமை இன்னதென்று அவர்களுக்கு நினைவூட்டவேண்டும்.

# ஆஸாத்

**தமிழ் தேசீய வாரப் பத்திரிகை.**

மலர் 1 } 8—3—48 திங்கட்கிழமை { இதழ் 7


## செவி சாய்ப்பார்களா?

**இந்தியர்கள்** முன்னிலையில் தங்கள் திட்டத்தை வைத்த ஜெயப்பிரகாஷரையும், சோஷியலிஸ்ட் கட்சியையும் பாராட்டுகிறோம். வகுப்பு வாதத்தை வேருடன் களைந்தெரிய, ஜாதி, மத வேற்றுமைகளை ஒழித்துக்கட்டி, ராணுவ ஆள் சேமிப்பில் காட்டப்படும் பாகுபாட்டை அகற்றி, வாலிபர்களுக்கு ராணுவப்பயிற்சி அளிக்கப்படவேண்டும் என்பதை வரவேற்கிறோம். பொதுவாக, திட்டம் சம்மந்தப்பட்டவரை, யாரும் அபிப்பிராயபேதம் கொள்வதற்கில்லை. காங்கிரஸ் திட்டமும் அதுதான். காங்கிரஸின் அமைப்பே அதை நிரூபிக்கின்றது. சுதந்திர இந்தியாவை ஜனநாயக அடிப்படையில் நிர்மாணிக்கவே அதுவும் விரும்புகிறது. வகுப்புவாதத்தை எவ்வகையிலும் விட்டுவைக்க அது சம்மதிக்கவில்லை. வகுப்பு வேற்றுமையை எதிர்த்து ஆத்மீக தியாகம் செய்த மகாத்மாஜி நிர்மாணத் திட்டத்தில் வகுப்பு ஒற்றுமையும் ஒரு அம்சமாகும். மக்களுக்கு ராணுவப் பயிற்சி அளிக்கப்படுமென, இந்திய சர்க்கார் காங்கிரஸ் பிரமுகர்கள் அறிவித்துவிட்டனர். இந்நிலையில் சோஷியலிஸ்ட் கட்சிக்கும், காங்கிரஸுக்கும் இடையே குறிப்பிடத்தக்க வித்தியாசம் ஒன்றுமில்லை. முற்போக்கு நோக்கமுள்ள எந்த கட்சியின் திட்டமும் அதுவாகத்தான் இருக்கமுடியும். திட்டத்தை நிறைவேற்றியாக வேண்டும். கட்டுப்பாடான முறையில் உண்மையாக உழைக்கும் ஊழியர்களைத்திரட்டவேண்டும். திட்டத்தை நிறைவேற்றி வைப்பதில் சோஷியலிஸ்டுகளுக்கு எந்த ஒரு நபரோ, கட்சியோ குறுக்கிடாதென்பது திண்ணம். சோஷியலிஸ்ட் அன்பர்கள் காங்கிரஸிலேயே இருந்து தங்கள் திட்டம் நிறைவேற உழைப்பதை யாரும் தடுக்கமாட்டார்கள். ஐக்கிய சக்தி சாதிப்பதை சிதறுண்டு சாதிக்க முடியாது. அறிக்கையில் ஜெயப்பிரகாஷ் காங்கிரஸிலிருந்து விலகப் போவதாக சொல்லவில்லை என்பது குறிப்பிடத்தக்க விஷயம். காங்கிரஸ் முற்போக்குள்ள ஒரு அரசியல் ஸ்தாபனம். தேச சேவை, மக்கள் வாழ்க்கைத்தரம் உயர உழைப்பதே அதன்வேலை. எனவே தேசசேவை செய்யும் எந்தக் கட்சியையும் அது வரவேற்கும். திட்டம், கொள்கை, லட்சியம், ஒன்றாயிருக்கும்போது ஒன்றுபட்டு வேலை செய்ய வழி காணுவது அசாத்தியமல்ல. ஒரே கொள்கையுள்ளவர்கள் பிரிந்து வேலை செய்வதால் பொதுமக்களிடையே தவறான அபிப்பிராயம் ஏற்படக்கூடும். அம்மாதிரியான அபிப்பிராயத்துக்கு இடமளிக்க சோஷியலிஸ்டு சகோதரர்கள் விரும்பமுடியாது. குறிப்பாக சோஷியலிஸ்டுகளின் ஐந்தாவது யோஜனையை நாம் ஏற்பதற்கில்லை. போதனாமுறையை மாற்றியமைக்கவேண்டுமென்பதை வரவேற்கிறோம். வருங்கால சந்ததிகள் வகுப்பு வேற்றுமை விஷத்தால் பாதிக்கப்படாமல் காப்பாற்றப்பட அதைச் செய்தேயாகவேண்டும். ஆயினும் மதக்கல்வி பாடசாலைகள் மூடப்படுவதை வரவேற்கவோ, சர்க்காருக்கு அம்மாதிரி யோஜனை கூறவோ நாம் தயாரில்லை. மத சுதந்திரமே ஜனநாயக ஆட்சியின் அளவுகோல். ஜனநாயகமென்றால் மதக்கல்வி தடுக்கப்படவேண்டும் என்று அர்த்தமல்ல. பிறகு இந்தியக் குழந்தைகள் மதக்கல்வி கற்க எங்குபோவார்கள்? பள்ளிக்கூடங்களிலும், காலேஜ்களிலும் உண்மையான மதக்கல்விமட்டும் போதித்திருந்தால், இன்று இந்தியாவில் உண்மை ஹிந்து, முஸ்லிம்கள் இருந்திருப்பர். நாட்டில் கோடிக்கணக்கான காந்திகளும், ஆஸாத்களும் நடமாடிக்கொண்டிருப்பது சாத்தியமாக இருந்திருக்கும். நடந்தேறிய துக்க சம்பவங்கள் நடந்திருக்கமுடியாது. எந்த மதமும் ஒழுக்கத்தையே போதிக்கின்றது. அதை அணிகலமாகக்கொள்ளாத மனிதன், மனிதனாகக் காட்சி அளிப்பதும் அசாத்தியமே. மற்றபடி சோஷியலிஸ்டுகளின் யோஜனைகளை ஏற்று அவர்களுடைய ஒத்துழைப்பை பெறும்படி சர்க்காரை வேண்டுகிறோம். அத்துடன் சர்க்காரின் உதவியை எதிர்பார்க்காமல் உடனடியாக செயலில் இறங்கி, சர்க்கார் ஒத்துழைப்பின்றியே நிறைவேறக்கூடிய திட்டத்திலுள்ள பகுதியை நிறைவேற்றும்படி சோஷியலிஸ்டு அன்பர்களை கேட்டுக்கொள்கிறோம். சோஷியலிஸ்டு கட்சிக்கும் அது நன்மை பயக்கக்கூடியதாய் இருக்க முடியும்.

# இழந்தோம் இணையிலா ஜோதியை!

(K. M. ஷேக் பீர் முஹம்மது,)
கல்லிடைக்குறிச்சி.

'மானஸஸெஞ்சரணம்'
என்ற சாமா ராக கீர்த்தனை மெட்டு.

**பல்லவி.**

காந்தி மகான் மறைந்தார்—அந்தோ! நம் (காந்தி)

**அனுபல்லவி.**

சாந்தமே உருவாய் சமரஸ திருவாய்
சன்மார்க்கங்காட்டிய சமத்துவம் நாட்டிய
(காந்தி)

**சரணங்கள்.**

இந்திய தேயமதின் இணையிலா சேயாய்
இந்தியர் தந்தையாய் இகபர ஜோதியாய்
இந்தியா சுதந்திரம் எய்திடச் செய்த
இந்தியர் இதயமாய் இலங்கிய ஏந்தல்
(காந்தி)

இங்குள்ள மக்களெல்லாம் இணக்கமாய் வாழ
இந்திய நாட்டை நாம் இன்பமாய் ஆள
எய்திய சுதந்திரம் என்றுமே நீள
எளிய நல் வழிகளை இயம்பிய எம்மான்
(காந்தி)

அஹிம்சையே ஆயுதமாய் அன்பே அணிகலமாய்
மஹிமை தரும் உண்மையே மனமதின் பூணாய்
சகிப்புத்தன்மையதனை சற்குண சஞ்சீவியாய்
அகிலம் புகழக்கொண்டு ஆத்ம மெய்ஞ்ஞானியாய்
(காந்தி)

செங்கதிராய்ப் பிறந்த ஜெகத்தவர் கண் திறந்த
ஜெயசீலராய் இருந்த சுயநலம் துறந்த
ஷேக்பீர் இசையுறைந்த சேவையினாற் சிறந்த
செம்மையெலாஞ் செறிந்த ஜெகமெங்குமே வருந்த
(காந்தி)

# பேனா முனை.

## நூதன அகராதி.

"குஜராத்தில் முஸ்லிம் அல்லாத அகதி ரயில் தாக்கப்பட்டபொழுது ஓடிப்போனவர்களில் 500 பெண்கள், குழந்தைகள் போலீஸாரால் மீட்கப்பட்டனர்." —லாகூர், லீக் பத்திரிகை.

பாகிஸ்தான் அகராதியில் 'கடத்திச் செல்லப்பட்டவர்கள்' என்பதற்கு 'ஓடிப்போனவர்கள்' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது போலும். இலக்கியத் துறையிலும்கூட பாகிஸ்தான் குறிப்பிடத் தக்க நல்ல முன்னேற்ற மடைந்திருப்பதாகத் தெரிகிறது.

## போகவேண்டியது தான்

"ஏப்ரல் முதல் தேதியிலிருந்து சாராயக்கடைகள் மூடப்படும்." —லக்னோ செய்தி.

லக்னோ சாராய வியாபாரிகள் பாகிஸ்தான் போகலாம். அங்கு சாராய விற்பனையாளர்களின் எண்ணிக்கை குறைவு பெருங்குறையாக கருதப்படுவதாக சொல்லப்படுகிறது.

## விஷமம் போகாது

"மகாத்மா காந்தி ஹிந்துக்களின் நம்பிக்கைக்கும், மரியாதைக்கும் பாத்திரமான மிகப்பெரிய தலைவர்."
—மிஸ்டர் ஜின்னா.

வாஸ்தவந்தான். காயிதே ஆஜமைப்போல் பல லக்ஷம் முஸ்லிம்களின் கொலைக்கும், பலகோடி முஸ்லிம்களின் அழிவுக்கும், காரணமாக இல்லாதவரை மகாத்மா முஸ்லிம்களின் தலைவர் ஆகமுடியாது என்பது மிஸ்டர் ஜின்னாவின்முடிவு போலும்.

## பிறவிக் குணம்

"ஜூனாகத் நவாப் சாஹிப் ஐந்துநாய்களை மேலும் விலைக்கு வாங்கினார்." —லீக் பத்திரிகை.

ஜெயிலுக்குள்ளேயும் திருட்டுப்பழக்கத்தை திருடன் விடுவதில்லையாம். ஜூனாகத் நவாப் சாகிப் பட்டத்தைத் துறந்து கராச்சிக்கு ஓடிய பிறகும் அவருடைய நாய் மோகம் அவரைவிட்டு ஓடாமலிருப்பது ஆச்சரியமே!

## பிரிவினைப் பயன்

"மகாத்மா அர்தியுடன் ஆஸாதும், கித்வாயும் கலந்து கொள்ளாத பரபரப்பான மர்ம அம்பலம்."

**(டில்லி உர்து பத்திரிகையின் 7-பத்தி அகலத் தலைப்பு)**

ஸ்மசானத்தில் எடுக்கப்பட்ட போட்டோவில் லார்டு மவுண்ட் பேட்டனுடன் மௌலானா ஆஸாதும், ரபீ அஹ்மத் கித்வாயும் உட்கார்ந்திருப்பது பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட பிறகும் டில்லி பத்திரிகையின் 'பரபரப்பான மர்ம அம்பலம்' தீர்ந்தபாடில்லை. பிரிவினைக்குப்பிறகு டில்லிக்கு கிடைத்த சாபக்கேடுகளில் லாகூரிலிருந்து வந்துசேர்ந்த பரபரப்பான மர்ம தினசரி பத்திரிகைகளும் ஒன்று.

# கடிதங்கள்.

### சிவகங்கை.

12-2-48 அண்ணலின் அஸ்தி கரைப்பு தினத்தன்று காங்கிரஸ் கமிட்டி சார்பில் அமைக்கப்பட்ட ஸ்ரீமான்கள் S. K. செல்லையா, பெரி. முத்துராமலிங்கம், கோ. ம. ஏ. சுப்பிரமணியம், த. பெ. சின்னையா, பெ. மாணிக்கம், மு. சோமன், நயினா முஹம்மது அடங்கிய அன்னதானக் கமிட்டியாரால் 4,000 ஏழைகளுக்கு அன்னம் அளிக்கப்பட்டது.

### காரைக்குடி.

13-2-48 அன்று 8,000 ஏழைகளுக்கு அன்னமளிக்க தாராளமாய் உதவிசெய்தவர்கள், ஊழியர்கள், அண்ணலின் அஸ்தி தாங்கிச்சென்ற ஜீப் காரை அலங்கரித்த புஷ்ப வியாபாரிகள், கோவாபரேடிவ் ஸ்டோர்ஸாருக்கு நன்றி அறிவித்தும் இந்திய டொமினியனுடன் சேரும் புதுக்கோட்டை, இராமனாதபுரம் ஜில்லாவுடன் இணைக்கப்படவேண்டுமென்று அரசாங்கத்தை கோரியும் நகர காங்கிரஸ் கமிட்டியில் 29-2-48 ல் தீர்மானங்கள் நிறைவேறின.

டாக்டர் V. S. S. மணி,
காரியதரிசி.

### முள்ளங்குடி.

S. S. குழந்தைவேல் தலைமையில் கூடிய கிராம காங்கிரஸ் கமிட்டியால், மஹாத்மா ஞாபகார்த்தமாக காங்கிரஸ் காரியாலயம், பார்க் இலவச வாசகசாலை, முதியோர் கல்வி, கிராம சீர்திருத்தம், முதலியவைகளுக்காக நிதி திரட்ட R. ஜகதீசனைத் தலைவராகக் கொண்ட 30-பேர் அடங்கிய கமிட்டி ஒன்று அமைக்கப்பட்டது.

M. S. வைத்தியநாதன்.

### கோடல்வாலி.

12-2-48-ல் 10,000 ஹிந்து, முஸ்லிம்கள் மாங்கரை ஆற்றையடைந்து சகல மதவேத பாராயணத்துடன் அண்ணலின் அஸ்தி கரைக்கப்பட்ட பிறகு ஈமக்கிரியை நடத்தியவர்கள், ஹரிஜன நாவிதனிடமே தலை மொட்டையடித்துக்கொண்டனர். பல அன்பர்கள் மஹாத்மாவைப்பற்றி பேசினார்கள்.

தீ. கி. மோஹன சுந்திரம்.

### பன்ருட்டி.

31-1-48 ல் புஷ்ப விமானத்தில் காந்திஜி பட ஊர்வலம் நடந்தது. 11-2-48 ல் R. கனக ரெத்தின ராஜா தலைமையில் நடந்த பொதுக்கூட்டத்தில் ராமானுஜம், ரவூப்சாஹிப், முருகேசன், கேசவநாதன் முதலியோர், மஹாத்மாவைப்பற்றி பேசினார்கள். 12-2-48 காலை ஆயிரக்கணக்கான ஏழைகளுக்கு அன்னமளிக்கப்பட்டது. அன்று மாலை யானை, புஷ்ப விமானத்தில் அஸ்தி ஊர்வலம் வந்து கெடில நதிக் கரையிலும் நேதாஜி சவுக்கிலும் பொதுக்கூட்டங்கள் நடந்தன.

### சிவகங்கை.

சிவகங்கை ஜனாப் I. S. ஆதம் சாகிப் (சோடா கம்பெனி) அவர்களால் போஸ் நகரில் நிர்மாணிக்கப்பட்ட மசூதி, பொது ஜனவிடுதி, ஆதம் இலவச வாசகசாலை 15-2-48 ல் முறையே ரா. ம. வெங்கடாஜலம் சேர்வை தலைமையில் ஜனாப் மௌல்வி மஹமத் கனி, சிவகங்கை அட்வகேட் ஸ்ரீ ராமானுஜம் அய்யங்கார் திறந்துவைத்தனர். சிவகங்கை காங்கிரஸ் கமிட்டி தலைவர் ஸ்ரீ K. V. சேதுராமச்சந்திரன், S. சோமசுந்தரம் பிள்ளை B. A, L. T., மவுல்வி S. E. முஹம்மது அலி முதலியோர் சொற்பொழிவாற்றினார்கள். தருமங்கள் நிரந்தரமாய் நடைபெற 20,000 ரூபாய் சொத்து எழுதிவைக்க I. S. ஆதம் சாஹிப் முன்வந்திருப்பது பாராட்டத்தக்கது.

### வருந்துகிறோம்

நீண்ட நாள் காங்கிரஸ் வாதியும் 'கமருஜ்ஜமான்' 'காலச்சந்திரன்' ஆசிரியரும் கௌஸல் ஆஜம் அவர்களின் 13வது தலைமுறையில் உதித்த சையது முஹம்மது மௌலானா (பக்தாதி) வின் புதல்வருமான சையத் அஹமத் மௌலானா ( காஹிரி ) காயல் பட்டினத்தில் 20-2-48 ல் தமது 70-வது வயதில் காலஞ்சென்றதை குறித்து வருந்துகிறோம். அன்னார் ஆத்மசாந்திக்காக பிரார்த்திக்கிறோம்.

அவரது தேசத்தொண்டை பாராட்டுவதுடன் அன்னாரது குடும்பத்தினருக்கு காங்கிரஸ் கமிட்டி சார்பாக அனுதாபம் தெரிவிக்கின்றேன்.

V. S. T. முஹம்மது இப்ராஹீம் சாஹிப், தலைவர்,
டவுன் காங்கிரஸ் கமிட்டி மேலப்பாளையம்.

# காஷ்மீரும், பாதுகாப்பு கவுன்ஸிலும்

காஷ்மீர் பற்றி இந்தியா தாக்கல் செய்த புகார் பாதுகாப்பு கவுன்ஸிலில் இன்றுமீண்டும் பரிசீலனைக்கு வருகிறது. ஜனவரி 2-ந்தேதி பாதுகாப்பு கவுன்ஸிலில் புகார் தாக்கல் செய்வதற்கு முதல் நாள் இந்தியாவின் முடிவு பாகிஸ்தானுக்கு அறிவிக்கப்பட்டது. பாகிஸ்தான் பதில்சமர்ப்பிக்க அவகாசம் கோரியதை இந்தியப் பிரதிநிதி எதிர்த்தும் கவுன்ஸில் அவகாசம் அளிக்க சம்மதித்து விட்டது. சிலதினங்களுக்குப் பிறகு பாகிஸ்தான் தாக்கல் செய்த பதில் புகாரில் காஷ்மீர் பிரச்னைக்கு சம்மந்தமில்லாத பலபிரச்னைகளும் அடங்கியிருந்தன. புகாருக்கு சம்மந்தமில்லாத பிரச்னைகளை கவுன்ஸில் அனுமதித்து காஷ்மீர் பிரச்னை உள்பட எந்த ஒரு பிரச்னையையும் முடிவு செய்ய முடியாமல் குழப்பி விட்டது.

இந்தியப் பிரதிநிதிகள் அரசியல் ரீதியைவிட வக்கீல் வாதத்திற்கு முக்கியத்துவம் கொடுத்தனரென்றாலும் ஆரம்பத்திலிருந்தே கவுன்ஸில் அங்கத்தினர்கள் இந்திய அபிலாஷைகளுக்கு எதிராக இருந்து வந்ததே இவ்வித நிலமைக்கு முக்கிய காரணம்.

கவுன்ஸிலிடம் ஜனவரி 5-தேதியன்று பாகிஸ்தான் அவகாசம் கோரிற்று. ஜனவரி 6-ந்தேதி கவுன்ஸிலின் ஆரம்பக்கூட்டம் கூடுவதாய் இருந்தது.

ஜனவரி 6-ந்தேதி அதிகாலையில் "காஷ்மீர் பிரச்னை மட்டுமே விவாதிக்கப்பட வேண்டுமென இந்தியா விரும்புகின்றது அதற்குமாறாக தகராறிலுள்ள இதர பிரச்னைகள் (ஜூனகட், கிழக்கு பஞ்சாப், டில்லி, கபுர்தலா இந்தியாவுடன் சேர்ந்தது, ஜம்மு, காஷ்மீர் முஸ்லிம்களின் அவதி) எல்லாம் விவாதிக்கப்பட வேண்டுமென்று பாகிஸ்தான் வற்புறுத்துகின்றது. இதர பிரச்னைகளையும் தாக்கல் செய்ய பாகிஸ்தானுக்கு அனுமதி அளிக்கப்படும்," என்று பி. பி. ஸி. நிருபர் செய்தி அனுப்பிவிட்டார். ஜனவரி 8-ந்தேதி பாகிஸ்தான் பத்திரிகைகள் அதை பிரசுரித்தும் விட்டன.

பாதுகாப்பு கவுன்ஸில் கூடுவதற்கு முன் இதர பிரச்னைகள் தாக்கல் செய்ய பாகிஸ்தான் அனுமதி கோருவதற்கும் முன், ஸர் ஜபருல்லா லேக் ஸக்ஸஸ் போய்ச் சேருவதற்கு முன்பே பி. பி. ஸி. நிருபருக்கு செய்தி எங்கிருந்து கிடைத்து, எப்படி பாகிஸ்தான் பத்திரிகைகளும் அதை பிரசுரித்தன என்பது தான் புதிராய் இருக்கிறது.

இதிலிருந்து பாதுகாப்பு கவுன்ஸில் அங்கத்தினர்கள் ஆரம்பத்திலிருந்தே பாகிஸ்தானுக்கு சாதகமாகவும் இந்தியாவுக்கு பாதகமாகவும் இருந்தனர் என்று ஏற்படவில்லையா?

பாகிஸ்தான் பிரதிநிதிகளுக்கு முன் நியூயார்க் சேர்ந்த இந்தியப்பிரதிநிதிகள் முன்னாலேயே இந்தியா திரும்பிவர நிர்பந்திக்கப்பட்டனர்

கவுன்ஸில் நடவடிக்கைகளின் போக்கினால் மூன்று விஷயங்கள் எழுகின்றன.

1. காஷ்மீர் தேசிய பிரச்னையல்ல சர்வ தேசிய பிரச்னையாகும் அல்லது நாம் அதை தேசிய பிரச்னையாக மதிக்கிறோம். ஆனால் உலகநாடுகள் அதை சர்வ தேசிய பிரச்னையாக பாவிக்கின்றன.

2. தங்களை தாங்களே முறியடித்துக் கொள்வதில் முனைந்து தேசத்தின் அத்தியாவசியத் தேவையான தேசிய சர்க்காரையும், தேசிய ராணுவத்தையும் பலப்படுத்த தவறியதால் 33கோடி மக்களைக்கொண்ட நாடு காஷ்மீர் அரங்கத்தில் 50,000 மலைஜாதியினரையும் அவர்களுக்கு உதவி வருபவர்களையும் முறியடிக்க முடியாமல் போய் விட்டது.

3. காஷ்மீர் அரங்கத்தில் நாம்விரும்பிய வெற்றி நமக்கு கிடைக்கவில்லை. சர்வ தேசிய அரங்கத்தில் நமக்கு உரித்தான ஜயத்தை இன்றைய நிலைமையில் எதிர்பார்ப்பதற்கில்லை. நாட்டிற்கு மேலும் பிரிவினையின் அபாயம் ஏற்பட்டிருப்பதுடன் வல்லரசுகளின் போக்கு நமக்கு எதிராகவும் இருந்து வருகின்றது. உலக அரசியல் போக்கையே மாற்றி அமைக்கும் சக்தியுள்ள 33-கோடி மக்களின் நாடு என்று ஆசியாவில் நிர்மானிக்கப்படாமல் தடுக்க அவை திட்டம் போடுகின்றன.

கடந்த 25-வருஷங்களாக சுதந்திரப் போராட்டத்தின் ஒவ்வொரு அரங்கத்திலும் அன்னியர்களை முறியடித்து வந்திருக்கும் நாம் இன்று நம் அருமை நாட்டின் ஒவ்வொரு அரங்கத்திலும் வெற்றியடைய ஆசைப்படுகிறோம். அவ்வித ஆசையை கொண்டிருக்கும் அதே சமயத்தில் உள்நாட்டு அணியில் தோல்வி அடைந்து கொண்டிருக்கிறோம். அதனால் மகாத்மாஜியை இழந்தோம். எல்லை அணியில் விரும்பிய வெற்றி கிடைக்காமல் சர்வ தேசிய அரங்கத்தில் வெற்றியை

நாடிச் சென்றோம். பாகிஸ்தான் மட்டுமின்றி உலகத்தையே எதிர்த்து நிற்க வேண்டியிருப்பதை, உணர்ந்து விட்டோம். இந்நிலையில் இந்திய சமுதாயம் புதிய முறையில் தன்னை திருத்தி அமைத்துக்கொண்டு தீர்மானமான உறுதியுடன் முன்னேற வேண்டும். தேசிய அணி, எல்லை முன்னணி, சர்வ தேசிய அரங்கத்தில் ஏற்பட்ட தோல்வியை வெற்றியாக மாற்ற வேண்டும். சரித்திரப் பெருமை வாய்ந்தமாபெரும் இந்திய உபகண்டத்தை எதிர் நோக்கியுள்ள அபாயத்தை உணர வேண்டும்.

லேக்ஸக்ஸஸ் நடவடிக்கைகள் சர்வ தேசிய அரசியல் அரங்கத்தில் நாம் தன்னந்தனியே நிற்கும் புதிய அபாயத்தை ஏற்படுத்திவிட்டன. சர்வ தேசிய சிக்கல்களில் எந்த நாடும் நம்முடன் ஒத்துழைக்கத் தயாரில்லை. இல்லையேல் பாதுகாப்பு கவுன்ஸிலில் ஒரு நாடாகிலும் நம்மை ஆதரித்திருக்கும். எல்லாவற்றையும்விட ரஷ்யாவும் நம்மை ஆதரிக்கவில்லை.

கௌரவத்தின் உன்னத சிகரத்திலிருந்து நாம் கீழ்நோக்கிச் செல்ல நம் தேசிய, சர்வ தேசிய அரசியல் குறைகள் என்ன என்பதுதான் பிரச்னை. நம் சர்க்கார் மீது எவ்வித குறையும் சொல்லுவதற்கில்லை. குறை மக்களுடையதே. ஆகஸ்ட் 15-ந்தேதி சுதந்திரம் கிடைத்தது. உலகத்தின் முன் தலை நிமிர்ந்து நின்றோம். தேசியக்கொடியின்கீழ் நம்முடைய நோக்கங்கள் மாறின. நடுத்தரமான காங்கிரஸ் வாதிகளும் தங்கள் லட்சியங்களை அலட்சியம் செய்தனர். படித்த அறிவாளிகள்கூட பைத்தியக்காரர்களைப் போல் தேசிய சர்க்கார்மீது குறை கூற ஆரம்பித்தனர். டில்லியில் கோரம் தாண்டவமாடிற்று.

"டில்லி தலைநகரம். எல்லா தேச பிரதிநிதிகளும் இங்கு இருந்துவருகின்றனர். இங்கு நடப்பதை அவர்கள் தங்கள் தேச அரசாங்கங்களுக்கு அறிவித்தும் வருகின்றனர். உலகத்தில் இந்தியாவுக்கு இருந்து வந்த மதிப்பு இந்தியா இழந்துவருகிறது." என்று நம் அன்புக்குரிய பண்டித ஜவஹர்லால் நேரு அடிக்கடி எச்சரித்தார். மக்கள் செவி சாய்க்கவில்லை. தவறான வழியில் சென்று, அரசியல் தலைவர்கள் ஒன்றும் செய்யமுடியாமல் செய்துவிட்டனர். முஸ்லிம்கள் விஸ்வாசம் சந்தேகிக்கப்பட்டது. அநேக இடங்களில் போலீஸ், ராணுவம், அதிகாரிகளின் விஸ்வாசமும் சந்தேகத்தில் இருந்தது. தேசிய அரசாங்கத்தின் அரசியல் போக்கை உணராமல் பாகிஸ்தான் அக்ரமங்களுக்கு இந்தியாவில் பழிவாங்க மக்கள் முற்பட்டனர். உள்நாட்டு கலவரங்களால் ராணுவ ஆள் சேமிப்பும், காஷ்மீர் முனையும் பாதிக்கப்படுவதை உணரவில்லை.

வெள்ளையர்கள் கலவரங்களை பிரயோஜனப் படுத்திக்கொண்டு இந்தியாவுக்கு இழைக்கக்கூடிய தீங்கைப்பற்றி கவலையோ, சுதந்திர பிரஜா உரிமைகளும் தெரியாத மக்களைக்குறித்து ஐக்கிய நாட்டு ஸ்தாபனத்தில் இருக்கும் 58 நாடுகள் என்ன முடிவு செய்யும் என்ற சிந்தனையோ இருக்கவில்லை. மதிப்புக்கு உரிய பிரதமரின் குரல் அடிக்கடி கேட்டோம். ஆனால் நடந்துகொள்ளவில்லை. நம்முடைய நாடு முடிவில் நம்முடைய நாசவேலைகளுக்கே இலக்காகி விட்டது இந்த நிலைமை கவலை அளிக்கத்தக்கதாகும். பெருமளவுக்கு அவநம்பிக்கை ஊட்டுவதாகும். இருப்பினும் அவநம்பிக்கை அடையாமல் அந்தரங்க சுத்தியுடனும் தீர்மானமான உறுதியுடனும் நடவடிக்கை எடுக்கவேண்டியது அவசியம். இத்துறையில் சில கடமைகள் நாம் செய்தாகவேண்டும்.

அமைதியை நிலை நாட்டி நம் சர்க்காருக்கு 33 கோடி மக்களின் பரிபூரண ஆதரவு இருப்பதாக உலகுக்கு உணர்த்தவேண்டும்.

சமுதாய அடிப்படையில் ராணுவத்தை திருத்தி அமைத்து சரியான துறையில் பலத்தைப் பெருக்கி சர்வ தேசிய வட்டாரத்தில் இந்திய கௌரவத்தை அதிகரிக்கவும் நிலைநாட்டவும்கூடிய ராணுவம் அமைய வேண்டும்.

இந்தியப் பிரதிநிதிகள் வக்கீல்வாதத்தைவிட்டு, புகாரை, குறிப்பிட்ட சில வாக்கியங்களில் அடக்கிக் கொள்ள வேண்டும். வாதப் பிரதிவாதத் திறமை உலகத்தில் நிலைநாட்டவேண்டிய அவசியம் நமக்கு இல்லை. காஷ்மீரில் யுத்தம் உடனடியாக நிறுத்தப் படவேண்டுமென்று வற்புறுத்தவேண்டும். இந்தக் கோரிக்கையில் நம் பிரதிநிதிகள் உறுதியாக இருப்பதுடன் இதர பிரச்னைகளில் சிக்கி விவாதத்தை வளர விடாமலும் இருக்கவேண்டும்.

நம் பிரதிநிதிகள் வக்காலத்துக்கு பதிலாக அரசியல் போக்கை அனுஷ்டித்து கவுன்ஸில் அங்கத்தினர்களுக்கு நம் நாட்டின் முக்கியத்துவம் அந்தஸ்தை உணர்த்தவேண்டும். வெளிநாட்டுக்காரியாலய உதவி இன்றி அது சாத்தியமில்லை. வெளிநாட்டு மந்திரி பண்டிட் ஜவஹர்லால் நேரு இத்துறையில் மற்றவர்களைவிட அதிகமான உதவி அளிக்கமுடியும். ஆயினும் பிரதிநிதிகள் அவ்வப்போது நிலைமைக்கு ஏற்றவாறு வெளிநாட்டுக்காரியாலத்தின் உதவி நாடவேண்டியது அவசியம். ஐக்கிய நாட்டு ஸ்தாபனத்தில் 58 தேசங்கள் அங்கத்தினர்களாய் இருக்கின்றன. அதில் பாதுகாப்பு மெம்பர்கள் பதினொன்று.

# ஜனநாயகமா? வெள்ளை தர்பாரா?

பாகிஸ்தான், ஆப்கானிஸ்தானம், ஈரான் இம் மூன்றுக்கும் மத்தியில், முக்கியமான சில துறைமுகங் களையும் கொண்டதாயிருக்கும், பலுஜிஸ்தானம், ஒரு கேந்திர ஸ்தானமாகும். அரசியல் விழிப்பு ஏற்பட விடாமல் பிரிட்டிஷார் பிற்போக்கில் வைத்திருந்த தற்கு, பூகோள ரீதியாக, பலுஜிஸ்தான் அமைப்பு முக்கியத்துவம் பெற்றிருந்த பாபமே தான் காரணம்.

ஒரு தேசத்தை தலைதூக்கவிடாமல் வைத்திருக்க வேண்டிய அவசியத்தை உணரும்போது, முதலில், அங்குள்ள சில நபர்களின் அந்தஸ்தை ஒரேயடியாக உயர்த்திவிட்டு, பொதுமக்கள் அவர்களுடன் தொடர்பு கொள்ள முடியாமல் செய்தபிறகு, விரல் விட்டு எண்ணிவிடத்தக்க, அந்தத் துரோகிகளைக் கொண்டு, தங்கள் காரியத்தை சாதித்துக்கொள்வது, ராஜ தந்திரிகளின் வழக்கம். பலுஜிஸ்தானில் வெள்ளை யர்கள் கையாண்ட முறை அதுதான்.

இன்று பாகிஸ்தான் கவர்னர் ஜெனரல் மிஸ்டர் ஜின்னுவும், அதே கைவரிசையைக் காட்டுகிறார்.

சமீபத்தில் சிபி (பலுஜிஸ்தான்) என்னுமிடத் திற்கு மிஸ்டர் ஜின்னு விஜயம் செய்தார். வெள்ளை ஆட்சியில் நடந்துவந்ததைப் போலவே, தர்பாரைக் கூட்டி, பலூஜ் சர்தார்களுக்கு பட்டம், பரிசுகளை வழங்கினர் ஆங்கிலேய சகாப்தத்தில் மக்களுக்குத் துரோகம் செய்து வந்ததை, இனியும் செய்துவரு வதற்காக, லஞ்சம் வழங்கப்பட்டது.

அச்சமயும் மிஸ்டர் ஜின்னு "பலுஜிஸ்தான் நிர் வாக விஷயத்தில், கவர்னர்-ஜெனரலுக்கு ஆலோ சனை கூற, ஒரு கமிட்டி அமைக்கப்படுமென்றும், அதன் அங்கத்தினர்களை கவர்னர்-ஜெனரலே நியமிப் பார் என்றும், யோஜனை கூறும் உரிமை மட்டுமே அவர்களுக்கு இருக்குமென்றும்" விளக்கினர்.

அதாவது, பிரிட்டிஷார் காலத்தில் இருந்ததைப் போலவே, பலூஜிகளின் கையிலில்லாமல் பலூஜி அல் லாத கவர்னர்-ஜெனரலிடம், பலூஜ நிர்வாகம் இருந்துவரும், என்பதுதான் அதற்கு அர்த்தம். இந்திய டொமினியனில் உள்ள சமஸ்தான மக்களின் உரிமை களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, பலூஜிகள்மீது இரக்கப்படாமல் இருக்க முடியாது.

'கல்லாத்' சமஸ்தானத்தை பாகிஸ்தானில் சேர்க்க, மிஸ்டர் ஜின்னு முழு மூச்சுடன் முயற்சித் தார் என்றும், பொதுஜன சபை, பிரபுக்கள் சபையை கலந்தாலோசிக்காமல், பதிலளிக்க முடியாது என்று, கல்லாத் கான் திட்டமாக மறுத்துவிட்டதாகவும் தெரியவருகிறது.

ஈரான் தெற்கு ஆப்கானிஸ்தானம், வஜீரிஸ்தா னுக்கு நடுவே இருக்கும், 600 சதுரமைல் விஸ்தீரண முள்ள, சிந்துவின் வளம் மிகுந்த மேல் பகுதியும் அடங்கியிருக்கும், பிரதேசத்தை, கல்லாத் கானிட மிருந்து, வருஷம் ஒன்றுக்கு 3-லக்ஷ ரூபாய் குத்த கைக்கு, வெள்ளையர்கள் வாங்கியிருந்தனர். குத்த கைக் கெடுவும் தீர்ந்துவிட்டது. அப்பிரதேசம் தனக் குத் திருப்பிக் கொடுக்கப்படவேண்டுமென்று கல் லாத்கான் வற்புறுத்தி வருகிறார்.

ஆனல், அப்பிரதேசத்தை திருப்பிக்கொடுத்து விடவோ, அல்லது, கல்லாத் சமஸ்தானம் சுதந்திரத் துடன் நீடித்து இருப்பதை அனுமதிக்கவோ, பாகிஸ் தான் தயாரில்லை.

கல்லாத் சமஸ்தானதிபதியின் கோரிக்கைக்கு இணங்கினல் அதன் பிறகு அரசியல், ராணுவத்துறை களில் பிரிட்டிஷ், அமெரிக்கர்களிடம் பாகிஸ்தா னுக்கு இருந்துவரும் மதிப்பு இல்லாமல் போய்விடுவ துடன், ரஷ்யாவுக்கு எதிராக பிரிட்டிஷ், அமெரிக் கக்கூட்டாளியாக இருந்து பணியாற்றுவதும் பாகிஸ் தானுக்கு அசாத்தியமாகிவிடும். பலுஜிஸ்தான்பிரச்னை மிகவும் சிக்கலானது என்பதில் சிறிதும் சந்தேக மில்லை.

---

(முன் பக்கத் தொடர்ச்சி.)

1- அமெரிக்கா, 2 பிரிட்டன், 3. ரஷ்யா, 4. பிரான்ஸ், 5. சைன, (ஐந்தும் நிரந்தர அங்கத்தி னர்கள்) 6 கனடா, 7 பெல்ஜியம், 8. அர்ஜைண் டைன, 9 கொலம்பியா, 10. ஷாம், 11. யுக்ரைன் (இதில் யுக்ரைன் ரஷ்ய தொகுதிக்கு தலைமை தாங்கு கிறது. ஷாம் அரபு லீக்குடன் சம்மந்தம் கொண் டிருக்கிறது. அர்ஜண்டைன எல்லோரையும்விட பாகிஸ்தானை அதிகமாக ஆதரிக்கிறது.) இந்த அரசாங் கங்களின் அரசியல் நாடியை பரீக்ஷித்து அவைகளின் ஆதரவைப்பெற அரசியல் வழிகளை அனுஷ்டிப்பது நம் பிரதிநிதிகளின் கடமையாகும். இன்றைய நிலைமையின் போக்கு நமக்கு எதிராக இருக்கிறது. அதை நாம் மாற்றியாகவேண்டும். இழந்துவிட்ட கௌரவத்தை இந்திய சர்க்காரும், இந்திய பொது மக்களும் திரும்பப் பெறுவதன்மூலமே அது சாத்தியம்.

முதல் இதழ் 13-ம் பக்கத் தொடர்ச்சி.

# பிரிவினைக்கு முன் பாகிஸ்தான் நிலைமையைக் குறித்து
# மௌலானா அப்துல் ஹகீம்
## தென்னாட்டு முஸ்லிம்களை எச்சரித்து வந்ததின் சாராம்சம்.

முஸ்லிம்களாகிய நாம் கம்பீரமானதொரு சரித்திரப்பெருமையை தாங்கி நிற்கின்றோம். இந்திய அரசகுமாரர்கள் என்று சொல்லி பெருமைப்பட நமக்கு உரிமை உண்டு. நமக்காக தனி தேசம் ஒன்று கேட்கப்படுகிறது. நம்முடைய கௌரவத்திற்கு எற்றதா இல்லையா என்று நாம் கவனிக்கவேண்டுமல்லவா? பாகிஸ்தானின் முக்கிய அங்கமாகிய வடமேற்கு பாகிஸ்தான் யூனிட்டைப் பற்றி விளக்கினேன். பாகிஸ்தானின் வரண்ட பொருளாதாரமே நாம் பிரிவினையை எதிர்ப்பதற்கு முக்கிய காரணம். முஸ்லிம்கள் பெருவாரியாக இருக்கும் மாகாணங்கள் பற்றாக்குறை பிரதேசங்களாக இருக்கவேண்டும் என்பது தெய்வசங்கல்பம் போலும்! எல்லைப்புற சிந்து மாகாண நிர்வாகச் செலவுகளுக்கும் மத்திய அரசாங்கத்தின் தயவை நாடவேண்டியிருக்கிறது. அவ்விரண்டையும் தனி மாகாணங்களாகப் பிரிக்க அதன் பொருளாதார சீர்கேடே முட்டுக்கட்டையாக இருந்தது. காங்கிரஸின் முயற்சியால் பிரிக்கப்பட்டன. அதன்பிறகு எல்லைப்புரத்திற்கு ஒரு கோடியே ஐந்து லக்ஷம் ரூபாயும், சிந்துவுக்கு ஒரு கோடி ரூபாயும் பிரதி வருஷம் மத்திய அரசாங்கம் கொடுத்துவருகிறது. உண்மையில் மத்திய அரசாங்கத்தின் உதவியின்றி தனி மாகாணங்களாக அவை இயங்கியிருக்கமுடியாது பலுசிஸ்தான் பொருளாதாரத்தைப் பற்றி சொல்லவேண்டியதேயில்லை. இந்திய யூனியனின் ஒரு தாலூக்காவுடனும் அதை ஒப்பிட்டுச் சொல்லமுடியாது

யுத்தத்திற்கு முன் பஞ்சாபின் மொத்த வருஷ வருமானம் 11 கோடி ரூபாயேதான். இங்கிலையில் இதர மாகாணங்களுக்கு உதவுவது ஒருபுறமிருக்க அதுவே முன்னேற்றமடைய முடியாமல் திண்டாடுகின்றது. இவ்வித பொருளாதார வரட்சியுள்ள மாகாணங்கள் தனியாகப் பிரிந்து அவைகளின் மொத்த வருமானமான 17-லிருந்து 18-கோடி ரூபாயை வைத்துக்கொண்டு நிர்வாகத்தை நடத்துவது சாத்தியமில்லை. தனி மத்திய அரசாங்கம் அமைந்தால் அதன் செலவுகளுக்கு பணம் எங்கிருந்து வரும். பிரிவினைக்குப் பிறகு டில்லியோ கொடுக்க முடியாது. ஒருக்கால் லீக் தலைவர்களை தட்டிக் கொடுத்துவரும் வெள்ளையர்கள் கொடுப்பார்களா?

### பாகிஸ்தான் தொழிலியல்.

ஒரு ஆட்சியின் அமைப்புக்கு தேசத்தில் கிடைக்கும் மூலப்பொருள்கள், அவைகளைப் பிரயோஜனப்படுத்திக்கொள்வதற்கான உபகரணங்கள், தொழில்வளம், வர்த்தகம், முதலியவைகளே பிரதானமாக கவனிக்கப்படவேண்டிய முக்கிய அம்சங்களாகும். ஒரு தேசத்தின் முன்னேற்றத்திற்கு விவசாயம் மட்டிலும் உதவமுடியாது. விவசாய நாடுகளெல்லாம் தொழில்வள தேசங்களுக்கு மார்க்கெட்டுகளாகவே இருந்துவருகின்றன. தொழில் துறையில் அபிவிருத்தி அடைய பாகிஸ்தானிலிருக்கும் வசதிகள் என்ன என்று கவனிக்கும்பொழுது நாம் திடுக்கிடவேண்டியிருக்கிறது தொழில் துறையில் ஒரு நாடு முன்னேறுவதற்கு அங்கு கிடைக்கும் மூலப்பொருள்களும் மூலதனமுமே முக்கியம் இந்தியாவின் இயற்கை அமைப்பைக் கவனித்தால் இந்த நாடு பிரிக்கப்படுவதற்குப் படைக்கப்படவில்லை என்பது நன்கு புலனாகும். புரொபஸர் கூப்லண்டும், கன்ஸர் வேடிவ்களும் நமக்குப் பிரித்துக்கொடுக்க பிரயத்தனப்படும் பாகிஸ்தான் பிரதேசத்தில் மூலப்பொருள்கள் மருந்துக்கும் இல்லை. கங்கை, யமுனை, சமவெளிகள், தென்னிந்திய பிரதேசங்களே மூலப்பொருள்களின் களஞ்சியங்களாக விளங்குகின்றன.

### நிலக்கரி.

அத்யாவசியமான மூலப்பொருள்; போக்குவரத்து, மின்சார உற்பத்தி, தொழிற்சாலைகளுக்கு நிலக்கரியின்றி ஒன்றும் செய்யமுடியாது தொழில் அபிவிருத்திக்கு நிலக்கரியே ஜீவநாடி. சென்ற யுத்தத்தில் நிலக்கரியின் அவசியத்தை உலகம் உணர்ந்துவிட்டது ராணிகஞ்ச், ஜரியா, கிரேடியா முதலிய இந்திய பிரதேசங்களில் 89 சதவிகித நிலக்கரி கிடைக்கின்றது. சங்கரேணி (ஹைதராபாத்)யில் ஐந்து சதவிகிதமும், மத்திய மாகாணத்தில் நான்கு சதவிகிதமும் கிடைக்கிறது. பாகிஸ்தானில் உள்ள

மியான வாலி, பலுஜிஸ்தானில் ஒரு சதவிகிதமே நிலக்கரி உண்டு. அதுவும் இரும்பை உருக்குவதற்கும் உபயோகிக்கமுடியாத அளவு மட்டரகமானது கப்பல்கள், இயந்திரங்கள் ஓட்டவோ, மின்சார உற்பத்தி செய்யவோ பிரயோஜனப்படாது. கந்தக சக்தி அதிகமாக இருப்பதே அதற்கு காரணம். வருங் காலத்தில் நல்ல ரக நிலக்கரி கிடைக்கும் என்று நம்பவும் இடமில்லை. 1936ம்- வருஷ கணக்குப்படி இந்தியாவில் இரண்டுகோடியே இருபத்தைந்து லக்ஷம் டன் நிலக்கரியும் பாகிஸ்தானில் ஒரு லக்ஷத்து ஐம்பத்தாறுயிரம்டன் நிலக்கரியும் கிடைத்திருக்கிறது.

## இரும்பு

இரும்பு, உருக்கு சம்மந்தப்பட்டவரை உலகத்திலேயே இந்தியா முதல் ஸ்தானத்தை அடைந்து விட்டது என்றால் அது மிகையாகாது. பதினாறு லக்ஷத்து இருபத்தையாயிரம் டன்னிலிருந்து இருபத்தைந்து லக்ஷ டன் வரையில் மத்திய மாகாணம், பீஹார், மேற்கு வங்காளம், தென்னிந்திய பீடபூமி முதலிய பிரதேசங்களில் இரும்பு கிடைக்கிறது. தென்னிந்திய குன்றுகளிலும் பிரதேசங்களிலும் இருக்கும் இரும்பைக்கண்டு உலகமே பிரமிக்கின்றது பஞ்சாப், சிந்து எல்லைப்புறத்திற்கும் இரும்புக்கும் வெகு தூரம். கிழக்கு வங்காளத்தில் மிகவும் சிறிய அளவில் இரும்பு இருப்பது உண்மையே. அதுவும் வேலைக்கு லாயக்கானதல்ல. சமீபத்தில் நிலக்கரியும் இல்லை. வெளியிலிருந்து நிலக்கரியைக்கொண்டு வந்து இரும்பை உருக்கினால் இரும்பின் கிரயத்தை விட செலவு அதிகமாகிவிடும். எனவே மட்டரகமான அந்த இரும்பும் உபயோகமற்றதாகவே இருந்து வருகிறது அதன் விகிதாசாரமும் ½ சதவிகிதத்திற்கு மேல் இல்லை. உலகத்திலேயே முதல்தரமான டாடா இரும்பு கம்பெனி இந்தியாவில்தான் இருக்கிறது. பாகிஸ்தானில் இல்லை. இரும்பு, நிலக்கரி இன்மையே அதற்கு காரணம்.

## மாங்கனீஸ்.

இரும்பு, கண்ணாடி உருக்குவதற்கும், சாயம், மருந்து உற்பத்திக்கும் அத்யாவசியமான மூலப் பொருள். யுத்தத்திற்குமுன் ரஷ்யாவுக்கு அடுத்த படியாக இருந்த இந்தியா யுத்தத்திற்குப் பிறகு மாங்கனீஸ் உற்பத்தியில் உலகத்திலேயே முதல் ஸ்தானத்தைப் பெற்றிருக்கிறது. 1938-ம் வருஷம் இந்தியாவில் ஒன்பது லக்ஷத்து அறுபத்தெட்டாயிரம் டன் மத்திய மாகாணம், பீஹார், தென்னிந்தியா முதலிய இடங்களில் மாங்கனீஸ் கிடைத்திருக்கிறது. பாகிஸ்தானில் இல்லை

## அலுமினியம்

மின்சாரக்கருவிகள், ஆகாய விமானங்களுக்கு மிக்க உபயோகமான பொருள். தென்னிந்தியா, அஸ்ஸாம், மத்திய மாகாணம், காஷ்மீர் முதலிய இடங்களில் கிடைக்கிறதே ஒழிய பாகிஸ்தானில் இல்லை. தற்சமயம் அதன் உற்பத்தி அதிகரித்திருக்கிறது.

## அப்ரகம்

கடந்த யுத்தத்தில் அப்ரகத்தின் முக்கியத்துவம் அதிகரித்துவிட்டது. ஆகாய விமானங்களுக்கும், மின்சார உற்பத்தி நிலையங்களுக்கும் அத்தியாவசியமானது அதற்கு பதிலாக வேறு பொருளையும் உபயோகப்படுத்த முடியாது. இவ்வளவு உபயோகமான பொக்கிஷத்தை ஆண்டவன் இந்தியாவுக்குத்தான் அளித்திருக்கிறான். உலகில் வேறு எங்குமே அது கிடையாது. பீஹார், சென்னை, கயா, ஆஜ்மீர் முதலிய விடங்களிலிருந்துதான் அப்ரகம் எடுக்கப்படுகிறது. யுத்தத்திற்கு முன் ஒரு லக்ஷத்து இருபத்து மூவாயிரம் அந்தர் கிடைத்த அப்ரகம் யுத்த காலத்தில் மிகவும் அதிகரித்திருக்கிறது.

## தாமிரம்

இரண்டு லக்ஷத்து எண்பத்தாறுயிரம் டன் தாமிரம் இந்திய எல்லைக்குள்தான் கிடைக்கிறது. பாகிஸ்தான் புனிதபூமியில் ஆண்டவன் ஏன் படைக்கவில்லை என்பது யோஜனைக்குரிய விஷயமாகும். இம்மாதிரியான எத்தனையோ அத்தியாவசியப் பொருள்களைப்பற்றி எடுத்துச்சொல்லலாம். "கௌரவமாக முன்னேறி வாழ முயற்சிக்கும் சமூகங்கள் அதைப்பற்றிசிந்திக்கட்டும். பாகிஸ்தானுக்காக போராடும் நமக்கு ஏன் அந்தக் கவலை" என்று சில நண்பர்கள் சலிப்படையலாம். ஆயினும் பெட்ரோலைப்போன்ற முக்கியமான பொருளையும் அதற்காக அலட்சியம் செய்துவிடமுடியாது. மனிதனுக்கு உதிரம் எப்படியோ அப்படித்தான் தேசத்திற்கு பெட்ரோல். ருமேனிய பெட்ரோலை அடைவதற்காக முயற்சித்து ஜெர்மனியே அழிந்தது. பர்மா பெட்ரோலைப் பெறுவதற்காக ஜப்பான் போராடி மறைந்தது. இன்று ஈராக், ஈரானிய பெட்ரோலுக்காக பிரிட்டிஷார், ரஷ்யர், அமெரிக்கர் முந்திக்கொண்டிருக்கின்றனர் இது உலகம் அறிந்த ரகஸ்யம். பெட்ரோலின்றி ஒரு தேசம் முன்னேறமுடியாது. உயிர் வாழவும் முடியாது. பாகிஸ்தானிலும் பெட்ரோல் கிடைக்கின்றது. லீக் லீடர்களின் கார்களுக்கு அது போதுமென்பதில் சந்தேகமில்லை. ஆனால் தேசத்தைப் பாதுகாக்க சிந்து நதி ஜலத்தினால் ஆகாய விமானங்களையும், டாங்குகளையும், டிரக்குகளையும், லாரிகளையும் ஓட்ட முடியுமா என்பது தெரியவில்லை. அது மட்டுமின்றி

தொழிற்சாலை, வியாபாரம், போக்குவரத்து முதலிய வைகளுக்கு பெட்ரோல் இல்லாமல் என்ன செய்ய முடியும். பாகிஸ்தானை வாங்கியது, தொழிற்சாலை களை நடத்தவும், ரயில்களை ஓட்டவும். வியாபாரத்தை வளர்க்கவும், ஆகாய விமானங்களை பறக்கவிடவும், டாங்குகளை நடத்தவும்தானு என்றுகூட சில லீக் அன்பர்கள் பதில் கூறலாம். இஸ்லாம் இஸ்லாம் என்று ஜபித்துக்கொண்டிருக்க வாங்கப்படும் பாகிஸ் தானில் பெட்ரோலும், நிலக்கரியும், உலோக வகை களும், மூலப்பொருள்களும் தேவையில்லை என்று அவர்கள் சொல்லக்கூடும். ஆனால்,

### தங்கம், வெள்ளி, ரத்தினங்கள்?

நம்முடைய முன்னோர்கள் ஆண்ட காலத்தில் யானை, குதிரைகள் மட்டுமல்ல. கோவேரி கழுதை களும் தங்கம், வெள்ளி, நவரத்தினங்களைச் சுமந்து கொண்டிருந்தன. நம் மூதாதையர் வசித்த அரண் மனை தங்கத்தூண்களில் நவரத்தினங்கள் இழைக்கப் பட்டிருந்தன. இன்று நம்முடைய குழந்தைகள் தங்க ஆபரணங்கள் அணியவும் தகுதியற்றவர் களாகப் போய்விட்டனரா?

1882-லிருந்து 1940-வரை 1½-கோடி அவுன்ஸ் தங்கம் கோலார் சுரங்கத்திலிருந்து மட்டும் எடுக்கப் பட்டிருக்கிறது. 1936-ம் வருஷம் இந்தியாவில் மூன்று லக்ஷத்து எண்பத்தோராயிரம் அவுன்ஸ் தங்கம் கிடைத்திருக்கிறது. பாகிஸ்தானில் வருஷம் ஒன்றுக்கு கிடைக்கும் தங்கத்தின் அளவு 43 அவுன்ஸ் தான். வெள்ளையர்கள் நாட்டைப் பிரித்து பாகிஸ் தான் ஏற்படுத்திய பிறகு பாகிஸ்தான் ஏகசக்ராதிபதி மிஸ்டர் ஜின்னுவுக்கு முடி சூட்டுவதற்காக ஒரு கிரீடத்தையும் தயாரிக்க போதுமான தங்கம் இல்லையே என்று வருந்தாமல் இருக்கமுடியுமா?

இந்தியாவில் வருஷம் ஒன்றுக்கு அறுபது லக்ஷத்து நாலாயிரம் அவுன்ஸ் வெள்ளி கிடைக்கின் றது. பாகிஸ்தானில் வெள்ளி என்றால் கருப்பா சிகப்பா என்று கேட்பார்கள். வாரத்திற்கு ஒரு நாள் 'வெள்ளி"யைக்கொண்டு அவர்கள் திருப்தி யடையலாம்.

நவரத்தினங்கள் அனைத்தும் இந்தியபூமியிலேயே விளைகின்றன. பாகிஸ்தான் புனித பூமிமீது ஆண்டவ னுக்கு கோபமோ? யாருடைய சாபமோ? அங்கு ரத்தினங்களில் ஒன்றையும் காணோம். நம் முன்னோர் கள் கட்டிய கட்டிட சுவர்களிலே ரத்தினங்களால் சித்திர வேலைப்பாடுகள் இன்றைக்கும் காணப்படு கின்றது. இன்று நமக்காக வெள்ளையர்கள் ஒதுக்கிக் கொடுக்கும் பாகிஸ்தானில் ஸ்படிககல்லுக்குப் பஞ்ச மென்றால் இது நம் துரதிர்ஷ்டமல்லவா?

1911ஆம் இறுதியில் ஐந்தாம்ஜார்ஜுக்கு டில்லியில் பட்டம் கட்டிய சந்தர்ப்பத்தில் அவருக்கு அணிவித்த முடியில் 217 இரத்தினங்கள் இழைக்கப்பட்டிருந் தன. அவைகளின் அன்றைய மதிப்பு அறுபது லக்ஷம் பவுன். அவை யாவும் நம் முன்னோர்களுக்குச் சொந்தம் வெள்ளையர்கள் கொள்ளையடித்துக் கொண்டுபோன கோஹினூர், மயிலாஸனம் முதலிய வைகளுக்கு வாரிசுரிமை கொண்டாடும் நாம் ஒரு ரத்தினத்தைப் பார்ப்பதற்காக பாகிஸ்தானிலிருந்து மேற்கு கோதாவரி, கிருஷ்ணு, தென்னிந்தியாவுக்கு பிரயாணம் செய்துபோகவேண்டுமா?

"நாம் எல்லாவற்றையும் கடந்த ஞானிகள். சிருஷ்டியில் கோஹினூருக்கும், கருங்கல்லுக்கும் வித்தியாசம் காணுவது நம் வேலையல்ல. ஹிந்து, முஸ்லிம் என்ற வேற்றுமையை வைத்துக்கொண்டு விளாசித்தள்ளினுலும் உலக ஆசாபாசங்களை அறவே விட்டொழித்த மிஸ்டர் ஜின்னுவை தலைவராகக் கொண்ட நமக்கு ஒன்றும் தேவையில்லை. பாகிஸ்தா னும், பாகிஸ்தான் பிரா மிஸ்டர் ஜின்னுவும் இருந்தாலே போதும்" என்று லீக் சகோதரர்கள் சொன்னல் அதை நாம் மறுத்துபேசத் தயாரில்லை ஆனல் விவசாயம் செய்யவாவது அமோனியம் ஸல்பேட் வேண்டாமா? முத்துக்களை சுட்டு சுண்ணும்பாக உபயோகித்தவர் களின் வார்சுகளாகிய நமக்கு வெற்றிலைக்குத் தடவ சுண்ணும்பாகிலும் வேண்டாமா? வீடுகள் கட்டி வாழ சிமெண்ட் வேண்டாமா?"

அதற்கும் வகையில்லாத பாகிஸ்தானை கம்பீர மான ஒரு சமூகத்தின் தாயகம் என்று சொல்வது எப்படி பொருந்தும்? இந்த நாடு பிரிக்கப்படவேண்டு மென்பது தெய்வ சம்மதமானல் அத்தியாவசியப் பொருள்களை இரண்டு பிரதேசங்களிலும் பகிர்ந்து படைத்திருப்பார். நாட்டைக் கூறுபோட கச்சை கட்டி நிற்கும் மிஸ்டர் ஜின்னு இயற்கை வசதிகளையும் கூறுபோட முடியுமா? அல்லது கன்ஸர்வேடிவ்கள் உபதேசித்த மந்திரத்தை ஜெபித்து மூலப்பொருள்கள் அனைத்தையும் உற்பத்தி செய்துவிடுவது சாத்தியமா?

வெள்ளை சூழ்ச்சிக்காரர்களின் சிபார்சினல் லார்டு லின்லித்கோவின் ஆதரவில் வளர்ந்த மிஸ்டர் ஜின்னுவை பின்பற்றி வெள்ளையர்களுக்கு சாதகமாக இந்தியர்களின் முன்னேற்றத்திற்கு எதிராக தாய் நாட்டை ஒரு கூட்டம் கூறுபோடப்போகின்றது என்பது ஆண்டவனுக்கு தெரியாமலிருக்க முடியாது. எனவே ஆண்டவன் தேசத்துரோகிகள் சுகமாக வாழ்வதை விரும்பாமல் பாகிஸ்தான் பூமியில் உலோக வகைகளோ, மூலப்பொருள்களோ, தங்கம், வெள்ளி, ரத்தினங்களோ வைக்கவில்லை என்று வாதிக்கப் படுவது முற்றிலும் நியாயமே!

'சென்ற வாரத் தொடர்ச்சி.

# —: புனர் வாழ்க்கை. :—

—(o)—

## முஸ்லிம்களுக்கு கிடைத்ததென்ன?

முஸ்லிம் உலக சிரேஷ்டர், அரசியல் அறிஞர், மௌலானா அபுல் கலாம் ஆஸாத், தன்னுடைய திட்டத்தை தெளிவு படுத்தி, "முஸ்லிம்களுக்கு பாகிஸ்தானால் ஏற்படக்கூடிய அத்தனை நன்மைகளும் இதில் அடங்கியிருக்கின்றன. ஆனால் பாகிஸ்தான் திட்டத்தின்மூலம் முஸ்லிம்களுக்கு ஏற்படக்கூடிய தீமைகள் மட்டும் நீக்கப்பட்டிருக்கின்றன," என்று, தீர்க்கதரிசனத்துடன்கூறியதை, அன்று எதிர்த்த அறிவிலிகள், இன்று உணருகின்றனர். அவருடைய திட்டத்தை அடிப்படையாகக் கொண்டே மந்திரி தூதுகோஷ்டித் திட்டம் வகுக்கப்பட்டிருந்தது.

சுருங்கச் சொல்லுமிடத்து, மந்திரி திட்டத்தின் மூலம், ஆறு மாகாணங்களில் முஸ்லிம்கள் மெஜாரிடியாக இருப்பதுடன், ஹிந்து முஸ்லிம் சரிசமப் பிரதிநிதித்வ அடிப்படையில், மத்திய சர்க்காரிலும் இருந்திருப்பார்கள். அதாவது, பாகிஸ்தானும் கிடைத்திருக்கும், இந்திய அரசியலிலும் முஸ்லிம்கள் கௌரவமான ஸ்தானத்தைப் பெற்றிருக்க முடியும்.

இன்று முஸ்லிம்களுக்குக் கிடைத்தது என்ன? வளம்மிகுந்த, இந்தியஉபகண்டத்தைவிட்டு, கிழக்கே சகதி நிறைந்த சனி மூலையிலும், மேற்கே பாரைகளும் பாலைவனமும் நிறைந்தபிரதேசத்திலும், ஒடுங்கிக்கிடக்கும்பரிதாபத்தைத்தவிர வேறொன்றும் இல்லை. இவ்வித துரதிஷ்டத்தை வெற்றி என்று நினைத்தால், அவர்கள் மீது இரக்கப்படாமல் இருப்பதற்கில்லை. எனவே மந்திரி தூதுகோஷ்டி திட்டத்தினால் இந்தியா எங்கும் முஸ்லிம்கள் அடிமைகளாக இருந்திருப்பர், என்று லீக் லீடர்கள் சொல்லுவது அர்த்தமற்றதும், முஸ்லிம் பொதுமக்களிடமிருந்து, தப்பித்துக் கொள்வதற்குமான பொய்யாகும். இன்று லீக் லீடர்கள் சொல்லுவது உண்மையானால், மந்திரி திட்டத்தை முதலில் முஸ்லிம் லீக் ஏற்றுக்கொண்டபோது, அவர்கள் அறிவுக்கு உண்மை புலப்படவில்லையா என்று கேட்கிறோம்.

### சுதந்தரம் நிலைக்குமா?

லீக்லீடர்கள் சொல்லும் சாக்குப்போக்குகளில், "அடிமைகளாக அரண்மனையில் வசிப்பதைவிட குடிசைகளில் சுதந்திரமாக" வாழ்வது மேல் என்பதுவும் ஒன்று.

அடிமை அரண்மனையைவிட, சுதந்திரக் குடிசை மேலானதென்பதை, யாரும் ஆக்ஷேபிக்கமுடியாது. ஆயினும் உண்மையான சுதந்திரமாகமட்டும் இருக்க வேண்டியது அவசியம். போலிச் சுதந்திரத்தைக் கண்டு ஏமாந்துவிடுவதற்கில்லை.

இன்றைய உலகத்தில் சிறிய நாடுகளின் சுதந்திரத்திற்கு அர்த்தமே இல்லை. சுதந்திரத்தைப் பாதுகாத்துக்கொள்வதற்கு, அத்தியாவசியமான இயந்திர சாதனங்களையும், நவீன யுத்த தளவாடங்களையும் தயாரிக்க சிறிய நாடுகளால் முடியாது.

இன்று அமெரிக்கா, ரஷ்யா, பிரிட்டன் இம் மூன்றும் வல்லரசுகளாக விளங்குகின்றன. சிறிய நாடுகள் அனைத்தும், ஏதாவது ஒரு வல்லரசின் ஆதரவில் இருந்துவருவதைப் பார்க்கிறோம். பொருளாதாரத்துறையிலும், இயந்திர சாதனங்களைப் பெறுவதிலும், சிறிய நாடுகள் வல்லரசுகளின் தயவை நாடியே நிற்கின்றன.

அதுமட்டுமல்ல. நிர்மாணம், முன்னேற்றம் முதலிய உள்நாட்டு விஷயங்களிலும்கூட, வல்லரசுகளிடமிருந்து சிறிய நாடுகள் கடன் வாங்குகின்றன. உலக முஸ்லிம் நாடுகள் அனைத்திலும், துருக்கி ஒன்று தான் பூரண சுதந்திரத்துடன் இருந்துவந்தது. ரஷ்ய ஆபத்தைத் தவிர்க்க, பலத்தைப் பெருக்குவதற்கு, அமெரிக்காவிடம் கடன் வாங்கி, அதுவும் இன்று அமெரிக்க பொருளாதார அடிமையாகிவிட்டது.

பாதுகாப்பு, முக்கியத்துவம் வாய்ந்த, ஒரு சிக்கலான பிரச்னை. கடந்த மஹா யுத்தத்தில், தன்னைப் பாதுகாத்துக்கொள்ள வசதியற்ற சிறிய நாடுகள், அடைந்த கதி உலகுக்குத் தெரியும். சில மணி நேரமும், எதிர்த்து நிற்க முடியாமல், கபளீகரம் செய்யப்பட்ட நாடுகளும் உண்டு. பிரான்ஸைப்போன்றதொரு தேசம், ஒரே வாரத்தில் சரணாகதி அடைந்ததைப் பார்த்தோம்.

இத்துறையில், இந்தியா சிறிய நாடல்ல. தன்னுடைய இயற்கை வசதிகளையும், ஆள்பலத்தையும் கொண்டு, வெகு குறுகிய காலத்தில், அமெரிக்கா, பிரிட்டனைப்போன்ற வல்லரசுகளையும், பின்னணிக்குத் தள்ள அதனால் முடியும். அடிமையாக இருந்த சமயத்திலும்கூட, ஸ்பெயின், துருக்கி, கிரீஸ், ஈரான், ஆப்கனிஸ்தானம், அரபு, எகிப்து, இந்தோனேஷ்யா, சைனு போன்ற சுதந்திர நாடுகளைவிட, இந்தியா பலமுள்ளதாக விளங்கிற்று. சுதந்திரம் அடைந்த பிறகு சொல்லவும் வேண்டுமா?

ஒன்றுக்கொன்று தொடர்பில்லாமல், இரண்டு கூறுகப் பிரிந்து கிடக்கும் பாகிஸ்தானின் நிலைமை என்ன? மத்திய சர்க்கார் வருமானம் உள்பட, மேற்கு பாகிஸ்தான் யூனிட்டின், மொத்த வருஷ வருமானம் 25 கோடி ரூபாயேயாகும். இதில் நான்கு மாகாணங்களின் நிர்வாகமும், மத்திய சர்க்காரும் நடந்தாகவேண்டும். பாதுகாப்புச் செலவுகள் வேறு இருக்கின்றன, சமாதானக்காலத்திலும்கூட, வடமேற்கு எல்லையை பாதுகாக்க,இந்தியசர்க்கார் 60,000 துருப்புகளை எல்லையில் வைத்திருந்தது. மலிவான அந்தக் காலத்திலும்கூட, வருஷம் ஒன்றுக்கு, 35 கோடி ரூபாய், அத்துறையில் செலவிடப்பட்டு வந்தது. எனவே, பாகிஸ்தான் வடமேற்கு எல்லையைப் பாதுகாக்க, 60,000 துருப்புகளையே வைப்பதாக இருந்தாலும், அதற்கு மட்டும் 35 கோடி ரூபாய் வேண்டும். நவீன யுத்த சாதனங்கள், தளவாடங்களின் செலவு, இதில் சேர்க்கப்படவில்லை. இந்நிலையில் பாகிஸ்தான், வல்லரசுகளின் ஆதரவை நாடாமலிருக்க முடியாது. அடிமை அரண்மனையைவிட, சுதந்திர குடிசை மேல், என்று சொல்லும் சுதந்திரப் பிரியர்களுக்கு, வல்லரசுகள் சுயநலமின்றி, தர்ம சிந்தனையுடன் பொருளுதவி செய்துவிடப் போவதில்லை. பொருளாதாரத் துறையில் அடிமையாக இருக்கும் ஒரு நாட்டின் சுதந்திரத்தை, உண்மை சுதந்திரமாகக் கொள்ளமுடியாது. எனவே, லீக் லீடர்கள், அடிமை அரண்மனையைவிட சுதந்திரக்குடிசைமேல், என்று சொல்லுவதில் அர்த்தமில்லை.

### அரசியல் மதிமயக்கம்

பிரிவினைக்கு முன் "இந்தியா, பாகிஸ்தான், இரண்டிலும் சிறுபான்மையோர் இருப்பார்கள். இந்தியாவிலுள்ள சிறுபான்மை முஸ்லிம்களுக்கு தீங்கிழைக்கப்பட்டால், பாகிஸ்தானிலுள்ள மைனரிடி ஹிந்துக்கள் மீது பதில் நடவடிக்கை எடுக்கப்படும்," என்று பல லீக் லீடர்கள் பகிரங்கமாக பேசிவந்தனர்.

முதலாவதாக அவ்விதச் செய்கை இஸ்லாமுக்கு விரோதமான, காட்டுமிராண்டித்தனமான செய்கையாகும். அப்படியே பதில் நடவடிக்கை எடுக்கப்பட்டாலும், அதனால் இந்திய முஸ்லிம்களுக்கு ஏற்படும் லாபம் ஒன்றுமில்லை.

பிரிவினையின்போது, பாகிஸ்தானிலிருந்த ஹிந்து மைனரிடிகளின் எண்ணிக்கை 2 கோடிக்கும் குறைவுதான். இந்திய மைனரிடி முஸ்லிம்களின் எண்ணிக்கையோ $4\frac{1}{2}$-கோடி. இரண்டு டொமினியன்களும் வஞ்சம் தீர்த்துக்கொள்வதாக இருப்பினும், இரண்டு கோடிக்கும் குறைவான ஹிந்துக்களுக்கு, நாலரை கோடிமுஸ்லிம்கள், வஞ்சம் தீர்க்கப்படுவர் அவ்விதத்திலும் அதிக நஷ்டம் முஸ்லிம்களுக்குத்தான்.

ஆனால், இன்று இந்தியா, மேற்கு பாகிஸ்தான் யூனிட்டிலிருந்த ஹிந்து, சீக்கிய, மைனரிடியை, அநேகமாக, வெளியேற்றிக்கொண்டு வந்துவிட்டது. அதே சமயத்தில், இந்திய முஸல்மான்கள், பாகிஸ்தானுக்குள் பிரவேசிக்க முடியாமல், நவாப் ஸாதா கதவடைத்து விட்டார். இந்தியாவிலிருந்து போய்விட்ட சில முஸ்லிம்களும், பாகிஸ்தான் சொர்க்கத்தின் நரகவேதனையிலிருந்து, திரும்பவும் இந்தியாவுக்கே திரும்பி வந்துகொண்டிருக்கின்றனர். பதில் நடவடிக்கை என்ற பேச்சுக்கும் இனி அர்த்தமில்லை.

மிஸ்டர் ஜின்னுவின் மெஸ்மரிஸ சக்தியில் மதிமயங்கிய முஸ்லிம்களுக்கு, எதைச் சொல்லியும் பிரயோஜனமென்ன? இந்தியாவில் பட்டினி கிடக்கும் முஸ்லிமான் ஒருவனிடம், கவலைப்படாதே! பாகிஸ்தானிலும் ஒரு ஹிந்து பட்டினி கிடக்கிறுன் என்று சொன்னமாத்திரத்திலே, அவன் பசி தணிந்துவிடும் போலிருக்கிறது. சொத்தைப் பறிகொடுத்த ஒரு முஸ்லிமிடம், அண்டையிலிருக்கும் ஹிந்து வீட்டிலும் திருட்டு போய்விட்டது என்று அறிவித்தவுடன் அவன் கவலை நீங்கிவிடும்போல் இருக்கிறது அல்லது நீ பட்டினி இருந்தால் என்ன? பாகிஸ்தானில் உள்ள உன்னுடைய முஸ்லிம் சகோதரர்கள், முழுக்கோழிகளை அப்படியே கபளீகரம் செய்து சுகிக்கின்றனர் என்று தெரிவித்தவுடன் வயிறு நிறைந்து தெம்பு ஏற்பட்டுவிடும் அளவுக்கு, இந்திய முஸ்லிம்கள் அறிவிழந்திருந்தனர். என்னே! பரிதாபகரமான மதிமயக்கம்! என்னே! மிஸ்டர் ஜின்னுவின் மதிமயக்கும் போதனை!

அரசியல் என்றால் தானம் என்று நினைத்துவிட்டனர் போலும்! தன்னுடைய, தன் தேசத்தினருடைய, சுபிட்சத்தையும், சுக வாழ்க்கையையும், முன்னேற்றத்தையும் அடிப்படையாகக்கொண்டதுதான் அரசியலாகும். தன்னை சர்வநாசத்திற்கு இலக்காக்கி, மற்றவர்களின் முன்னேற்றத்திற்காக முயற்சிப்பது

அரசியலல்ல. தனி நபர்கள் சம்மந்தப்பட்டவரையில், இவ்விதச் செய்கையை, தியாகம் என்று சொல்லலாம் ஆனால் தேசீய அடிப்படையில், இதற்கு என்ன பெயர் என்பது நமக்குத் தெரியாது. உலக சரித்திரத்திலேயே, இம்மாதிரியான தேசீய தடுமாற்றத்திற்கு உதாரணம் இல்லை. எனவே இந்திய முஸல்மான்களின் மதி மோசத்தைக் குறிப்பிட, அரசியல் அகராதியில், இனித்தான் வார்த்தையை சேர்க்க வேண்டும்.

### பாஸிஸப் படலம்

பாகிஸ்தானிலுள்ள மைனாரிடியுடன் நேர்மையாகவும், தாராள மனப்பான்மையுடனும், நடந்து கொள்ளப்போவதாக, மிஸ்டர் ஜின்னா, சொல்லி வந்தார். அது அவரால் முடியாத காரியம் என்று நாம் அப்பொழுதே பேசி வந்துள்ளோம். மேலும், அங்கிருந்த ஹிந்து, சீக்கியர்கள், மிஸ்டர் ஜின்னாவின், தாராளத்தை எதிர்பார்க்கவேண்டிய நிலைமையிலும் இருக்கவில்லை பாகிஸ்தான் ஏற்படுவதற்கு முன்னால் இருந்தபடியே தங்களை விட்டுவைத்தால் போதும், என்றே அவர்கள் நினைத்தனர். அரசாங்கஉத்தியோகங்கள் விஷயத்திலும், அவர்களுக்கு அக்கரையோ சகல உத்தியோகங்களையும், முஸ்லிம்களே தலையில் சுமந்து கொண்டு போவதைக் குறித்து கவலையோ அவர்களுக்கு இருக்கவில்லை. எப்பொழுதும்போல் அலுவல்களை கவனித்துக்கொண்டிருக்க அனுமதிக்கப்பட வேண்டுமென்றே அவர்கள் கோரினர்.

ஆனால், பாகிஸ்தானிலுள்ள சிறுபான்மையோருடன் நேர்மையாக நடப்பதன்மூலம், இந்திய சிறுபான்மை முஸ்லிம்கள், நேர்மையாக நடத்தப்படச் செய்வோம், என்று சொல்லிவந்த லீக் லீடர்கள், பாகிஸ்தான் ஏற்படுவதற்கு முன்பே, மைனாரிடியை நசுக்கும் படலத்தை ஆரம்பித்துவிட்டனர். கராச்சியில் ஹிந்துக்களுக்குச் சொந்தமான பெரிய பெரிய கட்டிடங்களெல்லாம் சர்க்கார் ஆக்ரமித்துக்கொண்டு விட்டது. கட்டிடங்களின் கிரயத்தைக் கொடுத்து விடும்படி கேட்டதற்கு, சர்க்காரிடம் பணம் இல்லை என்று பதிலளிக்கப்பட்டது. லீக் லீடர்களின் இந்தப் போக்குக்குப் பிறகும், இந்திய முஸல்மான்கள் விழிப்படையவில்லை. அதனால் அனுபவித்த துன்பங்களை இங்கு விவரிக்கவேண்டிய அவசியம் இல்லை.

### 'டான்' மனக்கோட்டை

பிரிட்டனிலிருந்து வந்த நிபுணர்கள், 25 லக்ஷ ரூபாய் செலவு செய்தால், சிட்டகாங் நல்ல துறைமுகமாக முடியும், என்று வெளியிட்ட அபிப்பிராயத்தை, வைத்துக்கொண்டு லீக் பத்திரிகையான 'டான்' சிட்டகாங் புனர்நிர்மாணத்திற்குப் பிறகு, கல்கத்தா முக்கியத்துவமே இழந்துவிடும் என்று கொம்மாளம் அடிக்கின்றது. அதைப் படித்த மாத்திரத்திலே, பல அன்பர்களின் வாயில் ஜலம் ஊறவும் ஆரம்பித்துவிடுகிறது.

துறைமுகத்தில் நல்லது கெட்டது என்பது முக்கியமல்ல. அதை அடுத்து எத்தனை மாகாணங்கள் இருக்கின்றன என்பதே முக்கியம் இம்பால் முதல் கான்பூர், காஜியாபாத் வரை, ஏறக்குறைய பாதி இந்தியாவுக்கு, கல்கத்தாவிலிருந்துதான் சாமான்கள் வருகின்றன. ஆகையினால் கல்கத்தா பெரிய துறைமுகம் என்று சொல்லப்படுகிறது. சிட்டகாங் துறைமுகமான பிறகு, கிழக்கு வங்காளம் மாத்திரம், கல்கத்தாவிலிருந்து சாமான்களை தருவிக்காமல் இருக்கும். அதனால் கல்கத்தா பாதிக்கப்பட்டு, அதன் முக்கியத்துவம் குறைந்துவிடமுடியாது. சிட்டகாங்கை 35 லக்ஷமல்ல, 35 கோடி ரூபாய் செலவு செய்து கட்டிய போதிலும், கிழக்கு வங்க துறைமுகமாக இருக்குமே ஒழிய, கல்கத்தாவின் அந்தஸ்தை அடைய முடியாது.

### கயிறு திரிக்கவா ?

பாகிஸ்தானில், நெல், கோதுமை, சணல், பருத்தி, விளைச்சலை பிரமாதப்படுத்தி சில லீக் லீடர்கள் பேசுகின்றனர். விவசாய நாடுகளுக்கு இன்றைய உலகத்தில் முக்கியத்துவம் இல்லை வல்லரசுகளாய் விளங்கும் நாடுகள், விவசாயத்துறையில் சக்தி பெற்றவையல்ல. தொழிலியல், இயந்திர சாதன வசதிகளைக்கொண்டே, ஒரு நாட்டின் பலம் அளவிடப்படுகிறது. அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி, ரஷ்யா போன்றவை தொழில் முன்னேற்ற நாடுகளாக கருதப்படுகின்றன. சைனா, ஆஸ்டிரேலியா, ஆப்பிரிக்கா, பிரேஸில், கனடா இஸ்லாமிய நாடுகள் பெரிய நாடுகளாக இருப்பினும், விவசாய நாடுகளாக இருப்பதால், அவை பலம் வாய்ந்து விளங்கமுடியவில்லை. விவசாய உற்பத்தியைக் கொடுத்து, வல்லரசுகளிடமிருந்து சாதனங்களைப் பெறுகின்றன இவ்விதம் நாட்டின் செல்வம் வெளிநாடுகளுக்குப் போய்க்கொண்டேயிருக்கிறது. மூலதனத்தை அதிகரித்து உற்பத்தி சக்தியைப் பெருக்க முடியாமல் வறுமையில் கஷ்டப்படுவதுடன், விவசாய நாடுகள் வல்லரசுகளின் பொருளாதார அடிமைகளாகவும் ஆகிவிடுகின்றன. எனவே, பாகிஸ்தானில் கிடைக்கும் சணலைக் கயிராகத் திரித்து, உலகத்தைக் கட்டியிழுக்க முடியுமென்று நம்புவது பைத்தியக்காரத்தனமாகும்.

## அரசியல் சுதந்தரம் போதாது

"அரசியல் சுதந்திரத்தால் மட்டிலும், ஒரு நாடு முன்னேற்றமடைந்துவிடமுடியும்" என்று சில லீக் லீடர்கள், தவறாக நம்பியிருக்கின்றனர். நாட்டின் முன்னேற்றத்திற்கு அரசியல் சுதந்திரம் மட்டும் போதாது. அரசாங்கத்தின் முதுகெலும்பு மூலதனமேயாகும்

ஹிட்லர் பலமடைய, வியாபாரிகள், தொழிலாளர்களின் ஆதரவே காரணம். வர்த்தகர்களின் பின்பலத்தைக்கொண்டே. அமெரிக்கா இன்று வல்லரசாக விளங்குகிறது. அமெரிக்க வருமானத்தில் $\frac{3}{4}$-பங்கு தொழில்வரிமூலமே வசூலாகின்றது

யூதர்களின் மூலதனத்தால், உலகத்தின் மாபெரும் அரசாங்கங்கள் நடந்துவருகின்றன. பிரிட்டன், அமெரிக்காவைப்போன்ற வல்லரசுகளும், யூத முதலாளிகளுக்கு கடன்பட்டிருக்கின்றன

அரேபியா, ஈரான், ஈராக், ஆப்கனிஸ்தானம், எகிப்து முதலிய நாடுகளுக்கு அரசியல் சுதந்திரம் இருக்கத்தான் செய்கிறது. இருந்தும். அவை பலம் பெற்று, தொழிலியலில் முன்னேற முடியவில்லை. ஏன்? அவைகளுக்குப் பின்பலமாக மூலதன உதவி இல்லாமல் இருப்பதே அதற்குக் காரணம்.

இந்தியாவில் முகலாய ஆட்சி பலம் வாய்ந்ததாக விளங்கிற்று. ஹிந்து முதலாளிகளின் மூலதன உதவி அவர்களுக்கு பின்பலமாக இருந்துவந்தது. அந்த பலத்தை அவர்கள் இழந்த பிறகு, அதிவிரைவில் முகலாய சாம்ராஜ்யக் கட்டடம், தரைமட்டமாகத் தகர்ந்துபோய்விட்டது.

ஒரு சமூகத்தில் முதலாளிகள் தோன்றுவதற்கு, குறிப்பிட்ட சில குணநிசயங்கள், இருக்கவேண்டிய தவசியம் அவ்வித குணநிசயங்கள், முஸ்லிம் சமூகத்தினிடம் பார்க்க முடியாது முஸ்லிம்கள் வர்த்தகர்களாக இருந்ததில்லை என்பதற்கு சரித்திரமே சான்று அரபியர்களைத்தவிர, இந்தியாவுக்கு வந்த முஸ்லிம்கள் வர்த்தகர்களாக வரவில்லை. இந்தியாவில் முஸ்லிம்களாக மதம் மாறியவர்களும்கூட ஏழைகளேயாவர். முஸ்லிம்களில் ஒரு பிரிவினரான கோஜாக்கள், பௌராக்கள் வர்த்தகர்கள்தான். ஆனல் அவர்கள் வெகு சிலரே. வர்த்தகர்களாயிருந்த அவர்களுடைய மூதாதையர், முஸ்லிம்களாகமாறியபிறகும் பரம்பரைத் தொழிலை விடாமல் நடத்தி வருகின்றனர். உலகமெங்கும் தொழில், வர்த்தகத் துறைகளில், முஸ்லிம்கள் வளர்ச்சி அடையாமல் இருப்பதற்கு, அவர்களுடைய சமூக குணநிசயமே முக்கிய காரணம்.

அரசியல் சுதந்திரம் கிடைத்தவுடன், பாரம்பர்ய குணநிசயங்கள் அறவே மாறிவிடும் என்றும், பாகிஸ்தான் முஸ்லிம்கள் மூலதனத்தைப் பெருக்கிக்கொள்வர் என்றும், புத்தியுள்ள எவரும் நம்ப முடியாது பைஸாவுடன் பைஸா சேர்த்து வைக்கும் குணம் முஸ்லிம்களுக்கு ஏற்பட முடியாது

இன்றைக்கும், அரசியல் சுதந்திரம் பெற்றிருக்கும் முஸ்லிம் நாடுகளிலெல்லாம், இதே குஜராத்தி, மார்வாடி, சீக்கியர்கள்தான் முதலாளிகளாய் இருந்து வருகின்றனர். காபூல், தெஹ்ரான் ஈராக், ஹைதராபாத் சமஸ்தானம் முதலிய விடங்களில் இருக்கும் பேங்குகள், இன்ஷியூரன்ஸ் கம்பெனிகள், தொழிற்சாலைகள், பெரிய வியாபாரங்கள், அனைத்தும் ஹிந்து சீக்கிய முதலாளிகளின் ஆதிக்கத்திலேயே இருந்து வருகின்றன.

[தொடரும்]

மக்கள் மகிழ்வுடன் விரும்புவது!
ஆர். ஜி
**தில்பஹார் ஹேராயிலே!**
எங்கும் கிடைக்கும்] [ஏஜண்டுகள் தேவை
ரஹ்மானியா கம்பெனி,
வலங்கிமான் P. O. தஞ்சை ஜில்லா.

**"ஆஸாத்"**
(தமிழ் தேசீய வாரப் பத்திரிகை)
உங்கள் ஊரில் ஏஜண்டிடம் கேளுங்கள். உங்கள் ஊரில் "ஆஸாத்" ஏஜென்ஸி இல்லாமல் இருந்தால் ஏஜென்ஸி எடுக்கும்படி அவருக்கு யோசனை கூறுங்கள். இது உங்கள் தேசியக் கடமை, "ஆஸாத்" சந்தாதாரர்களாக ரூ 6. (ஆறு) மணியார்டர் மூலம் அனுப்பி உடனே பதிவு செய்து கொள்ளுங்கள்.
மேனேஜர்
"ஆஸாத்"

Printed by V JAYARAM at his Sri Rama Printing Works, 129, Kadalangudi E St., Kumbakonam.
Edited and Published by MOULANA ABDUL HAKEEM, 13, K. South, Kumbakonam.